பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 21 புதன்கிழமை (07.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 315

## பொங்கு தமிழ் நிகழ்வில் பேசிய அமைச்சர்கள் இருக்க கூட்டமைப்பினர் மீது மட்டும் சட்ட நடவடிக்கை ஏன்?

### முழுப் பாரபட்சம் என நீதிமன்றில் வாதம்

கொழும்பு, ஒக்டோபர் 07

இலங்கையில் பரவலாக இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் உரையாற்றியோர் இன்றும் அமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக, கட்சித் தலைவர்களாக, முக்கிய பிரமுகர்களாகத் திகழ்கின்றார்கள். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை ஏதுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் எதிராக ஏன் வழக்கும், நீதிமன்ற விசாரணையும் முன்னெடுக்கப்படுகின்றன? இது அவர்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட பாரபட்ச நடவடிக்கையேயன்றி வேறில்லை.

எனவே, இந்த வழக்கை இத்தோடு நிறுத்த நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்.- இப்படிக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் வாதிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்கள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராஜா.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன், செல்வராஜா கஜேந்திரன், கே.சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே, சட்டத்தரணி தவராஜா இவ்வாறு வாதாடினார். (19 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வரலாறு -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான ஆங்கில மொழி-I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்.

## வேகமற்ற மீள்குடியேற்றம் ஏமாற்றம் தருகிறது அகதிகளின் மழைக்கால அபாயங்கள் குறித்துக் கவலை

### அகதி முகாம்களை நேற்று நேரில் பார்த்த பிரிட்டிஷ் அமைச்சரின் அவதானிப்பு



கொழும்பு, ஒக். 07

இலங்கையில் அகதிகளை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளில் வேகமின்மை காணப்படுகிறது என்றும், இதுகுறித்து தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் பிரிட்டனின் சர்வதேசத்துக்கான அபிவிருத்தி அமைச்சர் மைக் போஸ்டர் தெரிவித்துள்ளார்.

அகதிகளை மீள்குடியேற்றுவதற்காகப் பிரிட்டன் வழங்கிய உதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மைக் போஸ்டர் தெரிவித்துள்ளார்.

முகாம் மக்களுக்குத் தேவையான அவசரமான உதவிகளை விட மற்றைய உதவிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஒரு முகாமிலிருந்து மற்றொரு முகாமிற்கு இடம்நகர்த்தும் செயற்பாடே தற்போது நடைபெற்று வருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களை நேற்று மாலை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் மேற்கண்ட கருத்துக்கள்ளை வெளியிட்டுள்ளார் எனப் பிரிட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## 12 வெளிநாட்டுப் பிரஜைகள் வவுனியா அகதி முகாம்களில்

கொழும்பு, ஒக். 07

வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 12 வெளிநாட்டுப் பிரஜைகள் தங்கியிருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் தமது உறவினர்களைப் பார்ப்பதற்காகச் சென்ற நிலையில் பாதுகாப்பு வலயப் பகுதியில் சிக்கிக்கொண்டனர். இதன்பின்னர் இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்கியிருந்த போது புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் புலிகளுடன் இணைந்து போரிட்டனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தமிழகம், பிரிட்டன், அவுஸ் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி வேட்பாளர் மீது ஆயுதமுனையில் தாக்குதல்!

கொழும்பு, ஒக். 07

தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் நேற்றுக்காலை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் மாத்தறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை மாத்தறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

உதய திஸநாயக்க என்ற வேட்பாளரே (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் குண்டுவெடிப்பு இருவர் பலி; பலர் படுகாயம்!

கொழும்பு, ஒக். 07

மதுரை அருகே உள்ள சோழவந்தான் ரயில் நிலையத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு பேர் உடல் சிதறிப் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோழவந்தான் ஒதுக்குப்புறமான ஆள் நடமாட்டம் குறைவான பகுதி என்பதால் சேதம் குறைவாக ஏற்பட்டிருக்கிறது என்றும், ஆனால் மக்கள் கூடும் நேரத்தைக் குறிவைத்தே இக்குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு பொலிஸ் உயரதிகாரிகளும், ரயில்வே உயரதிகாரிகளும் விரைந்துள்ள்னர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை – இந்தியக் கடற்படையினர் திருமலையில் கூட்டுப் போர்ப் பயிற்சி

கொழும்பு, ஒக். 07

இலங்கை - இந்தியக் கடற்படையினர் இணைந்து நேற்று கடற்போர்ப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர். இந்தப் பயிற்சிகள் திருகோணமலைக் கடற்பரப்பில் நடைபெற்று வருகின்றன.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்திய மற்றும் இலங்கைக் கடற்படையினர் இணைந்து மேற்கொள்ளும் முதலாவது கடற்போர்ப் பயிற்சி இதுவாகும்.

நட்புறவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்த இந்தியக் கடற்படையின் 'ஐ.என்.எஸ். ஷால்' மற்றும் இலங்கைக் கடற்படையின் 'வருணா' ஆகிய போர் கப்பல்கள் இந்தப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதுதவிர அதிவேகத் தாக்குதல் படகுகளும் பயிற்சியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியப் போர்க் கப்பலில் உள்ள ஹெலிகொப்டர்களும் பயிற்சிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என இலங்கைக் கடற்படையின் ஊடகத் தொடர்பு அதிகாரி கப்டன் அத்துல சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையில் பயிற்சி பெறும் சிப்பாய்கள், மத்திய தரத்தில் உள்ள அதிகாரிகள் உட்பட 100 பேர் இந்த பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-சி)

### அடுத்த ஆண்டுக்கான

## வரவு - செலவுத்திட்டம் இல்லை; இடைக்காலக் கணக்கு அறிக்கை மட்டுமே!

கொழும்பு, ஒக். 07

2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படமாட்டாது - என்று அரசு அறிவித்துள்ளது.

அதற்குப் பதிலாக இடைக்காலக் கணக்கு அறிக்கையை நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பிக்கவுள்ளது எனப் பிரதி நிதியமைச்சரும் அரச வருமானத்துறை அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று மாலை கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அவர் கூறினார்.

அடுத்த வருடத்தில் தேர்தல்கள் எதிர்பார்க்கப்படுவதால், இடைக்காலக் கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க அரசு முடிவெடுத்துள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், அரசு வரவு - செலவுத்திட்டத்தை இலங்கை அரசு சமர்ப்பிக்காமைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தமே காரணம் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி தெரிவிக்கின்றோம்





தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள யாழ்குடாநாட்டு ஆசிரியர்களின் இடமாற்றத்தை மனிதாபிமான நோக்கில் கவனமெடுத்து இரத்துச் செய்வித்துதவிய சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களிற்கு தமது மனப்பூர்வமான நன்றியை இணைப்பு பெற்ற ஆசிரியர் சங்கம் தெரிவித்துக் கொள்கின்றது.

அத்துடன் எமக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் உதயன் (J.P) அவர்களுக்கும், ஏனைய தோழர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

எமது சங்கத்தின் வெற்றிக்கு அதன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் புரிந்துணர்வுடனும் நேர்மையுடனும் செயல்பட்ட ஆசிரியப் பெருந்த கைகளுக்கும் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். எம்முடன் தோள் கொடுக்கும் எமது சங்க ஆசிரிய நண்பர்களது மனிதாபிமான பிரச்சினைகளை எமது சங்கம் துணிச்சலுடன் முன்னிறுத்தும் என உறுதி செய்கின்றோம்.

தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர் ஒன்றியம்
பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(89610)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 7

நீர்வேலி செல்வக் கதிர்காம ஆலயத்தில் புரட்டாதிக் கார்த்திகை உற்சவம் இன்று புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது.

காலை விசேட ஸ்கந்த ஹோமவழிபாடும், அபிஷேக ஆராதனையும் நடைபெறுவதுடன் கந்தர் அனுபூதிப் பாராயணமும் இடம் பெறும்.

மாலையில் முருகப் பெருமான் திருவீதி உலாவரும்நிகழ்வும் இடம்பெறும்.

(04-10-72)

# பாராட்டி வாழ்த்துகிறோம்





யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் 2009 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 172 சிறப்புப் புள்ளிகளைப் பெற்ற ஆறுகால்மடம் பாடசாலை வீதியைச் சேர்ந்த நேசராஜா - விஜிதா தம்பதியரின் புதல்வி

**செல்வி சிஷாந்திகா**

சகல செல்வங்களும் பெற்று எல்லாம் வல்ல கண்ணகி அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
**ஐயா, அம்மம்மா, அப்பா, அம்மா, விஜயன் மாமா**

(இ/561559)

# கண்ணீர் அஞ்சலி



எமது சம்பந்தியான
**சுப்பிரமணியம் நவரட்ணம்** (முருகேஸ்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாமகள் லேன்,
கொக்குவில்.
(89628)
சுப்பிரமணியம் சுகுமாரன் குடும்பத்தினர்
தவம் (சகோதரி).

# சிவா பற்சிகிச்சை நிலையம்

தபாற் கந்தோர் ஒழுங்கை, உரும்பிராய்

பார்வையிடும் நேரங்கள்

- ★ வெள்ளி தவிர ஏனைய நாள்கள் :- மு.ப 10.30 - 12.00
- ★ ஞாயிறு :- மு.ப 9.00 - 12.00 , பி.ப 4.00 - 6.00

(89601)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01. | 07 |
| 10 | 09 |
| 1925 | 2009 |

**அமரர் கந்தையா சிவப்பிரகாசம்** (புங்குடுதீவு)

மாதம் ஒன்று மறைந்துவிட்டது
மனமோ இன்னும் மலைத்து நிற்கிறது
தினமும் நாங்கள் கலங்குகின்றோம்
தியாக சீலமே சென்றதேனோ
முப்பத்தோராம் நாளில் தியானிக்கின்றோம்
முக்கணன் தாள் சேர்ந்திடவே

699/2, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
**குடும்பத்தினர்.**
(இ/561560)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நவரட்ணம் (முருகேஸ்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரட்ணம் (முருகேஸ்) 05.10.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: மனோன்மணி (மனைவி),
சகோதர சகோதரிகள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பரீட்சார்த்திகள் சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம், ஒக். 07

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ சாதாரணதர விசேட பரீட்சைக்கு (கணிதம் II) தோற்றவுள்ள, நலன்புரி நிலையங்கள், நிவாரணக் கிராமங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மாணவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(04-204)

## மீன்பிடியியல் தொடர்பான செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் துறையினர் நடத்தும் பொருளாதார மீன்பிடியியல் பற்றிய செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு மீன்பிடியியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சுறாச்செட்டை பதனிடல், இலாபமீட்டும் பொழுதுபோக்கான அலங்கார மீன் வளர்ப்பு, ஆய்வுகூட ஆட்டீமியா வளர்ப்பு தொடர்பான கருத்துரைகளை மீன்பிடியியல் ஆலோசனை நிபுணர் கலாநிதி எஸ்.சிவலிங்கம் வழங்கவுள்ளார்.

(6)

## மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறைகள்

யாழ்ப்பாணம், ஒக் . 07

தீவகவலயத்தில் நெடுந்தீவு கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறை நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினமும் வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளன.

தரம் 11 மாணவர் களுக்கான ஆங்கில பாட பாசறை நிகழ்வுகள் நெடுந்தீவு றோ. க. மகளிர் வித்தியாலயத்திலும் தரம் 8ஆம், 10ஆம் மாணவர்களுக்கான விஞ்ஞான, தமிழ்ப்பாடங்களுக்கான பயிற்சிப் பாசறைகள் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(04-10-267)

## சிகரெட் விற்பனை விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஒக். 7

'சிலோன் ரூபாக்கோ' நிறுவனத்தால் யாழ்.மாவட்டத்துக்கென சிகரெட் விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே அவை விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்ட விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராகப் பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட சிகரெட் விலை விவரம் வருமாறு:-

டன்கில் - 19 ரூபா, பி அன் எச் - 19 ரூபா, பால் மோல் 72 - 14 ரூபா, ஜேபி ஜீஎல் - 18 ரூபா, பேர் ஆஸ் - 10 ரூபா, [illegible] - 4 ரூபா.

(50-201)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 18.09.2009 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் எய்திய எங்கள் குலவிளக்கு

## அமரர் நடராசா அருந்தவராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.10.2009) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்டன் அழைக்கிறோம்.

பாடசாலை வீதி,
மாதனை,
பருத்தித்துறை.
(89614)
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகேஸ்வரி கனகசிங்கம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி கனகசிங்கம் (ஆச்சி) 04.10.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.
(89616)
தகவல்: குடும்பத்தினர்.

## முத்தையா சத்தியநாதன்

(படவரையுநர், கட்டடத் திணைக்களம்)



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முத்தையா சத்தியநாதன் (04.10.2009) ஞாயிற்றுக்கிழமை சிவப்பாதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், பத்மினிதேவியின் பாசமிகு கணவரும், வசந்தி நவம் (சிங்கப் பூர்), பாலாஸ்கந்தன் (பிரான்ஸ்), ஞானஸ்கந்தன் ( சிங்கப்பூர்), சிவதர்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவரட்ணம், செல்வரத்தினம், பத்மாவதி, பொன்மலர், ஜெயலட்சுமி (இராசு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சண்முகநாதனின் (தவம் - J.P) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.
(சி/561551)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## சிவசம்பு பாலசிங்கம்

[முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகர் கோண்டாவில்]

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு பாலசிங்கம் கொழும்பில் (05.10.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் குலேஸ்வரியின் கணவரும் சண்முகநாதன், பராசக்தி ஆகியோரின் சகோதரரும் மோகனச்சந்திரன், கிருஷ்ணவேணி, கிருஷ்ணபவ்ானி, கிருஷ்ணரூபா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (05.10.2009) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.
தகவல்: ச.ஞானச்சந்திரன் (பேறாமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## வன்னி அகதிகள் மீள்குடியமர்வு இழுபடுகின்றமைக்குப் பின்னால்....!

வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், மக்களை மீளக் குடியமர விடாமல் அவர்களை - சுமார் மூன்று லட்சம் தமிழர்களை - வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம்களுக்குள் முடக்கி வைத்திருக்கின்றது அரசு.

இதற்கு, அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்களும், சமாதானங்களும் என்னவாக இருந்தாலும், தமிழர் தரப்பில் இந்த அடக்குமுறை நடவடிக்கைக்கான பிரதான காரணமாக எது கருதப்படுகின்றது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளிப்படையாகப் போட்டுடைத்திருக்கின்றார்.

கண்ணிவெடி அகற்றப்படாமையால் அந்தப் பிரதேசத்துக்கு மக்களை அனுமதிக்க முடியாது என்று சாக்குப் போக்குச் சொல்லி அடம் பிடிக்கின்றது அரசு. மக்கள் மீள்குடியமர்வுக்கு இடமளிக்கப்படாமல் தடுத்துக் கொண்டு, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான - பூர்வீக வாழிடமான - வன்னியை சிங்களமயப்படுத்தும் திட்டத்தைச் செயற்படுத்தக் காய்களை நகர்த்துகின்றது அரசு என்பதை அம்பலப்படுத்துகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதிகளில் படையினருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுகின்றன. பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. பாரிய இராணுவ முகாம்களும், தளங்களும் அவற்றுக்குத் துணையாக சிறிய முகாம்களும் வன்னியெங்கும் உருவாக்கப்படுகின்றன. தமிழர்களின் தாயகத்தின் மையபூமி முற்றாக ஆக்கிரமிப்பு அத்துமீறலுக்கு உள்ளாகின்றது என வேதனையுடன் புலம்புகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழர் தாயகப் பிரதேசம் அரசின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் பேரினவாதத்தின் கொடும் பிடிக்குள் கபளீகரமாகும் சரித்திரமே, இலங்கை பிரிட்டனின் ஆட்சிப் பிடியிலிருந்து விடுபட்ட காலம் முதல் இற்றை வரையான 61 வருட கால நிகழ்வுகளாக இங்கு பதிவாகியிருக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழரின் தேசிய வாழ்விற்கு ஆதாரமான அத்தியாவசிய அடித்தளங்களைத் தகர்த்தழிப்பதன் மூலம் தமிழினத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் குரூரத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே தமிழர் தாயகத்தின் மீதான அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன என்பதும் உலகறிந்த உண்மை.

தமிழ் மக்களை அவர்களது தாயக மண்ணிலேயே சிறுபான்மையினராக்கி, அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்தைச் சிதைப்பதே இந்தக் குடியேற்றத் திட்டத்தின் பின்னால் புதைந்து கிடக்கும் மூலோபாயம் என்பதும் வெளிப்படையானது.

இதன் மூலம் இலங்கைத் தீவில் அவர்களின் தனித்துவ உரிமைகளுக்கான கோரிக்கையை அடியோடு இல்லாதொழிக்கலாம் என்பது பேரினவாதத்தின் கபடத் திட்டம்.

தமிழர்களின் பாரம்பரிய நிலத்தை அடாத்தாகப் பறித்தெடுக்கும் இந்த வல்வந்த முயற்சி 1948 முதல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது என்பதும் தெளிவு. அது இப்போது மிக உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கிலும், கிழக்கிலும் முதலில் இந்தப் பேரினவாதக் கபளீகரப் பசிக்கு இலக்கானது கிழக்கே. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும், பின்னர் பிரிட்டனின் பிடி நீங்கிய காலத்திலும், அதன்பின்பு தற்போது வரையும் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்புப் பற்றிய புள்ளி விவரங்களே இந்தத் திட்டமிட்ட நிலப்பறிப்பு அத்துமீறலுக்கு தம்பாட்டில் சான்றாக அமையக்கூடியவை.

முதலில் கிழக்கில் தமிழர்களின் விகிதாசாரம் மலினப்படுத்தப்பட்டது. அதையடுத்து தமிழர் தாயகத்தைக் குடிப்பரம்பல் மூலமே கூறுபோடும் எத்தனமாக, வடக்கையும்,கிழக்கையும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வெட்டிச் சிதைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இப்போது தமிழர்கள் தனித்துவமாகப் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசமாக வடக்கே எஞ்சி நிற்கின்றது. அதில் - வடமாகாணத்தின் தென் பகுதியில் - வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழர்களின் தனித்துவத்தை சிதறடிக்கும் வகையில் திட்டங்கள் கட்டவிழ்கின்றன. வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த தமிழர்கள் அனைவரும் யுத்தம் காரணமாக கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு ஓரிடத்தில் - வவுனியா அகதி முகாம்களுக்குள் - குவிக்கப்பட்டுள்ளனர்.

வெற்றிடமாகியிருக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இப்போது சிங்கள - பௌத்த சின்னங்களையும் பண்பாட்டுக் கோலங்களையும் நிலைநிறுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவை ஓரளவு பூர்த்தியானதும், பூர்வீகமான தமிழ் மக்கள் அங்கு மீளக்குடியேறும் சமயத்தில் இப்போதைக்கு முப்பது வீதம் வரை சிங்களவர்களையும் சேர்த்துக் குடியேற்றுவதன் மூலம் இந்தப் பூர்வீகப் பிரதேசங்கள் மீதான தமிழர்களின் தனிப் பாத்தியத்தை - உரிமையை - அடியோடு சிதைக்கலாம் என ஆட்சிப்பீடம் கருதுகின்றது என்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இத்தகைய சிங்களக் குடியேற்றங்களையும் சேர்த்து முன்னெடுக்க வாய்ப்பான நேர காலமும், சூழ்நிலையும் வரும்வரை வன்னியில் இடம்பெயர்ந்த அகதிகளின் மீள் குடியமர்வு இழுபடும் என்றே தோன்றுகின்றது.

## ஏ - 9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு மருந்து வகைகள்; வைத்திய சாலைகளில் அவற்றுக்கான தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், ஒக்.07

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு ஏ-9 வீதியூடாகத் தொடர்ந்து மருந்துப் பொருள்கள் எடுத்துவரப்படுவதனால் அரச வைத்தியசாலைகளில் அவற்றிற்கான பற்றாக்குறை நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியூடாகப் பாரவூர்திகளின் மூலம் அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருள்கள், குழந்தைகளுக்கான திரிபோஷா, கோன்சோயா போன்ற சத்துணவுகள் தொடர்ச்சியாக எடுத்துவரப்படுகின்றன.

இந்த மருந்து வகைகள் உடனுக்குடன் அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சில முக்கிய மருந்துகளைத் தவிர ஏனைய மருந்துவகைகளுக்கான பற்றாக்குறை நீங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளும் தொடர்ந்து ஏ-9 வீதியூடாக எடுத்துவரப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## வவுனியாவிலிருந்து அழைத்துவரப்பட்டோரில் மூவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக்.07

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் அழைத்துவரப்பட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் மூவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலை டாக்டர் அ.ஜெயக்குமாரன் தலைமையில் வைத்திய குழுவினர் துர்க்கையம்மன் ஆலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை நேற்றுமுன்தினம் இரவு பார்வையிட்டனர்.

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள ரதீஸ்கரன் ரஜிந்தன் (வயது 2) என்ற குழந்தையும் திருச்செல்வம் மனோரஞ்சிதம் (வயது - 26), யோகராசா அனந்தமலர் (வயது - 23) ஆகிய கர்ப்பிணிகளும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (1)

## அளவெட்டிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஒக்.07

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

அளவெட்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஷ்வரன் தலைமையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்கள் பகுதி வீடுகளில் நீர் தேங்கக் கூடிய பொருள்கள் சேகரிக்கப்பட்டு, அழிக்கப்படுகின்றன.

வலி.வடக்குப் பிரதேச சபை செயலாளர் ந.அருணகிரி, உள்ளூராட்சி உதவியாளர் ஆர்.அறிவரசன் ஆகியோரது உதவியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 4 டிராக்டர்க்ள் டெங்கு பரப்பக்கூடிய கழிவு பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் இத்திட்டம் துரித கதியில் ஆரம்பிக்க பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (50-302)

## முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகள் மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதிமொழி

யாழ்ப்பாணம், ஒக். 07

முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மாகாண சபை ஊடாக இன்னும் மூன்று மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இத் தகவலைத் தெரிவித்தார்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மு.ப. 11 மணியளவில் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே. செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முன்பள்ளி ஆசிரியர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் என்னிடம் கோரிக் கைகளை விடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கைகளுக்கு முழுமையான முறையில் இதுவரை தீர்வு காணப்படவில்லை. தென்மராட்சி, வடமராட்சி முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் அண்மையில் சந்தித்து தமது கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

இன்றையஆசிரியதின விழாவில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் சந்தித்துக்கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் திடமான ஒரு உறுதிமொழியினைத் தருகின்றேன்.

அதாவது உங்கள் வேதனம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மாகாண சபை ஊடாகக்கல்வியமைச்சின் அனுமதியுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் மாகாண சபை உயர்மட்டக் குழுவினருடனும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருடனும் தொடர்பு கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனப் பிரச்சினைகளுக்கு பிரதேச சபை ஊடாக தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் - என்றார். (50-09-224)

## ஏ-9 வீதியூடான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு யாழ்.தனியார் மினிபஸ் வண்டிகளையும் அனுமதிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 6

ஏ-9 வீதியூடான போக்குவரத்தில் ஈடு பட யாழ்.மாவட்டத் தனியார் மினிபஸ்களுக்கும் அரசு அனுமதியளிக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ்.குடாநாடு பொருளாதாரத் தடைக் குள் சிக்குண்டிருந்த போது தேங்காய் எண்ணெய்யிலும், மண்ணெண்ணெய்யிலும் தமது பஸ் வண்டிகளை இயக்கி மக்களுக்குச் சேவை செய்தவர்கள் யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தியாளர்கள்.

ஆனால் ஏ-9 வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபட இவர்களுக்கு அனுமதியில்லை. எனினும் குறிப்பிட்ட ஒரு சில தனியாருக்குச் சொந்தமான சொகுசு பஸ்கள் ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே குடாநாட்டு மினிபஸ்களையும் ஏ-9 ஊடாகப் போக்குவரத்து நடத்த அனுமதித்தால், மக்களும், மினிபஸ் உரிமையாளர்களும் அதிக நன்மை அடைய முடியும் - என்றும் அவர் தெரிவித்தார். (04)

## அரியாலை கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் மக்கள் மிக விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர்

### அமைச்சர் டக்ளஸ் அப்பகுதி மக்கள் மத்தியில் தெரிவிப்பு

நல்லூர், ஒக்.07

அரியாலை கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் படை அதிகாரிகளுடன் நான் தொடர்பு கொண்டிருந்தேன். இந்தப் பகுதிகளில் மக்களைக் குடியமர்த்த அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே இப்பகுதிகளில் மீள்குடியேற்றம் வெகு விரைவில் ஆரம்பமாகும் என சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரியாலைப் பகுதி மக்களிடம் தெரிவித்தார்.

அரியாலை கிழக்கு, தென்கிழக்குப் பிரதேசங்களை கிராம அலுவலர் ஜே/89, ஜே/90 உட்பட அரியாலையின் இதர கிராமசேவகர் பிரிவுகளான ஜே/67, ஜே/94 பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இந்தக் கலந்துரையாடலின் போது சமுகமளித்திருந்தனர்.

நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தப் பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாகக் கட்டளைத் தளபதியுடன் தொடர்புகொண்டிருந்தேன்.

இதனையடுத்து படைத்தலைமை ஹலோ றெஸ்ட் நிறுவனத்திற்கு மிதிவெடி அகற்ற அனுமதி வழங்கியுள்ளதாகவும், இன்னும் மூன்று அல்லது நான்கு தினங்களில் இப் பணி முடிவடையும் எனவும் அதைத் தொடர்ந்து உடனடியாகவே இப்பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவார்கள் - என்றார்.

வசந்தபுரம், கடற்கரை வீதி, எழிலூர் மகேந்திரபுரம் போன்ற உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கும் விடுவிக்கப்பட்ட பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளுக்கும் மக்கள் செல்வதற்கான பாதைகள் குறித்து இராணுவம் முடிவு செய்யும் எனவும் இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமரவுள்ள மக்களுக்கு யாழ்.மாவட்டச் செயலகம் ரூபா 25 ஆயிரம் வழங்கும் எனவும் யூ.என்.எச்.சி.ஆர். போன்ற அமைப்புக்களின் உதவிகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான உதவிகளும் வழங்குமாறும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், 512ஆவது படை அதிகாரி மேஜர் மடுகல்ல, கிராம அலுவலர்கள், யாழ்.மாநகர சபைஉதவி மேஜர் இளங்கோ (றீகன்), மாநகரசபை உறுப்பினர் ம.மங்களநேசன் உட்பட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (50-111)

(படங்கள்: 5 ஆம் பக்கத்தில்)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 22 | 08.10.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.ப. 9.19 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.ப. 11.45 வரை |
| [illegible] | [illegible] வரை |
| ராகுகாலம்: | 01.32 - 03.02 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தையா பத்மநாதன் [பழனி மாஸ்ரர்]



[ஓய்வுபெற்ற ஆசிரியர், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்]

வாகையடி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 114, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் 05.10.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், கனகாம்பிகையின் (மணி) அன்புக் கணவரும், கோகிலதாஸ் (லண்டன்), மோகனதாஸ் (அமரர்), குமுதினி (லண்டன்), தேனுகா (லண்டன்), பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிராஞ்சி (லண்டன்), விமலேந்திரன் (லண்டன்), பகீரதன் (லண்டன்), நாகவதனி ஆகியோரின் மாமனாரும், ராசரத்தினம், குணபாக்கியவதி, தனபாக்கியவதி, பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், தங்கராசா (லண் டன்), பாலசிங்கம் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), புவனேஸ்வரி (அமரர்), கார்த்திகேசு (உசன்), சிவரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஹரிசன், அபிசன், சேவுகன், பிரவீனா, திலானா, ஷயானா, ஸர்ஷன் ஆகியோரின் பேரனும் சுப்பிரமணியம், தனபாலசிங்கம் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*114, பிறவுண் றோட்,*
*யாழ்ப்பாணம்.* *(89611)*

தகவல்: கனகாம்பிகை (மணி)
மனைவி.

# வைப்புச் செய்தால் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஒக். 7

ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோயிலடி உபதபால் அலுவலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (10.10.2009) அன்று புதிதாக கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கு யாழ்.தபால் நிலைய தேசிய சேமிப்பு வங்கியினரால் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக பிடாரி அம்மன் கோயிலடி உபதபாலக தபால் அதிபர் திருமதி தயா உசா இராஜ்குமார் தெரிவித்துள்ளார். (அ)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**A.S.S. பாம்,**
தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## காணி விற்பனைக்கு

யாழ்.கண்டி வீதியில் கொடிகாமம் சந்தியிலிருந்து 0.5 Km தூரத்திலுள்ள மொத்தம் 17 பரப்புக் காணி, பயன்தரு தென்னம் தோட்டத்துடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0262222017**

SLIM
Sri Lanka Institute of Marketing

PRELIMINARY CERTIFICATE IN MARKETING

NOW AVAILABLE IN JAFFNA

IIS City campus, 200, Sivan Pannai Rd, Jaffna
Tel: 0212228060/0212222201




When you walk into an interview, you need to make an impact. And what your qualification is makes a big difference. Brought to you by The National body for Marketing, The Sri Lanka Institute of Marketing - "The Preliminary Certificate in Marketing" (PCM) delivers a thorough foundation for students and working executives taking their first steps into marketing careers.

**Now you have the option of doing it at your leisure - ONLINE**

**Duration :** 40 Hrs of sessions over a 3 Month Period
Call Mihi on **0777701166** and Rini on **0772735062** or contact us on our General No: **0112675000**

**PCM** 3 Months ▶ **PG DipM (SL)** 18 Months + Dissertation ▶ **MBA** Buckinghamshire New University (UK)

No.94, Ananda Rajakaruna Mw, Colombo 10.
E-mail: edu.stproducts@slim.lk Web: www.slim.lk

**Accredited Study Centres**

| | | |
|---|---|---|
| SLIM Borella: 0112675000 | SLIM Colpetty: 0114722522 | SLIM Kandy: 0812203006 |
| Kandy: 0812223468 | Puttalam: 0322221487 | Gampaha: 0602338486/8, 0332234244 |
| Batticaloa: 0652227797, 071 8187793 | Kurunegala: 0602973297, 0372221255 | Mawanella: 0777800078 |
| Veyangoda: 0777702005 | Galle: 0917396140, [illegible] | Matara: [illegible] |
| Jaffna: 0212228060, 0212222201 | Trincomalee: 0262225270, [illegible] | Vavuniya: [illegible] |

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி. தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

## பீம் வாசக சிரப் (Vasaka Syrup)

இருமல் பாணி

**யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

*Manufactured By:*
*Beam Hela Osu Lanka*
*High Level Road,*
*Kottawa, Pannipitiya*
*Ayu D.M.Reg.No: 165*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*பிறப்பு:*
*19.12.1978*

*இறப்பு:*
*07.10.2007*



அமரர்
## பரமநாதன் உதயவண்ணன்
[விழிசுட்டி - சங்கானை]

எம்மைப் புரந்தவனே
வரண்ட எம் இதயம் - உன் நினைவில்
கரைந்து போகின்றது.
துயரம் கடலாய் பெருகிறதே - ஐயா
இன்று நீர் மறைந்து இரண்டாண்டாச்சு - அப்பா
மேதினியில் நீ மறைந்தாய்
ஏதிலியாய் நாம் இங்கே.

விழிசுட்டி,
சங்கானை. (சி/561548)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா இராசம்மா



புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இராசம்மா நேற்று (06.10.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் நவக்கிரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவக்கிரி,*
*புத்தூர்.* *(86615)*

தகவல்:
த.நிர்மலானந்தம் (சிவம்).

## திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை (முடமாவடி) வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் நேற்று (06.10.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பொன்னம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் மனைவியும், மாலினிதேவி (கனடா), பாஸ்கரன் (கனடா), மஞ்சுளா (கனடா), சுகந்தினி (விரிவுரையாளர் .தே.க.கல்லூரி, கோப்பாய்), சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபிநாத் (கனடா), தவச்செல்வம் (ஆசிரியர், கோப்பாய், ம.வி), சிவாகரன் (கொழும்பு), சுகிர்தராஜா (சாலைப் பரிசோதகர், யாழ்.சாலை, C.T.B) ஆகியோரின் அருமை மாமியாரும், பிரவீன் (கனடா), பானுஜா, சந்தோஸ், கஸ்தூரிக்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.69, இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.* *(89609)*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை கிழக்கு, தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் செய்வது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 51 ஆவது படை அதிகாரி மேஜர் மடுகல்ல ஆகியோர் அமர்ந்திருப்பதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மீள்குடியமர்வோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக். 7

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும், சேவைச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். வர்த்தக தொழிற்துறை வேளாண்மகளிர் ஒன்றியத்தின் பணிப்பாளரும் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் நிறுவனரும் தலைவருமான எஸ். ஜே. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார். வைத்திய கலாநிதி உரோமகேஸ்வரன், யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முன்பள்ளி, ஆசிரியர் சேவையில் 5 வருடத்தினை நிறைவு செய்த முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சேவைச் சான்றிதழ்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிக் கௌரவித்தார்.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இந்த முன்பள்ளி ஆசிரியர்தினக் கௌரவிப்பு நிகழ்வானது 11 ஆவது தடவையாக நடத்தப்பட்டுள்ளதாக முன்பள்ளி ஒன்றியத் தலைவர் எஸ்.ஜே செல்வராசா தெரிவித்தார். (50-9-224)

## ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் சில

**நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

நித்தியானந்தன் துங்கீசன் - 146, துரைஐயா விதுர்சன்- 143

**தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை**

சபாபதிப்பிள்ளை கோபிதன்- 170, இராமச்சந்திரன் உதயதர்சன்- 162, சிவசிதம்பரம் நிதுசா- 160, விஜயகுமார் வினோதினி- 154, சோதிநாதன் கிரிதரன்- 152, சுரேஸ் மதுசன்- 149, பிரபாகர் பிருந்தா- 149, இளங்கோ கௌதமி-148, ராஜ்குமார் கமல்ராஜ்-147, தில்லைநாயகன் தனுஜன்- 145, சிவஞானச்செல்வம் மாதுமை- 144, சிவநேசன் சுஜன் -142.

(201- 138-236)

## தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்கில் பேராளர்களைப் பங்குபற்றுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கியவிழா, நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, மறுநாள் சனிக்கிழமைவரை தொடர்ந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது. ''ஈழத்துத் தமிழ் இலக்கியம்- யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம்'' என்னும் கருப்பொருளில் ஏழு ஆய்வாளர்களால் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுள்ள பேராளர்களைக் கலந்துகொள்ளுமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கேட்டுள்ளது.

இலக்கிய விழாவின் இறுதிநாளான எதிர்வரும் சனிக்கிழமை 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆளுநர் விருது வழங்கல், 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த நூல்களுக்குப் பரிசில் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

விருதுகளைப் பெறுவோர் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-201)

## ஏழாலை விவசாயச்சங்க அங்கத்தவர்களுக்கு இரசாயனப் பொருள்கள் வழங்கப்பட்டன

வலி.வடக்கு,ஒக்.7

ஏழாலை விவசாய சங்க அங்கத்தவர்களுக்கு இலவசமாக விவசாய இரசாயனப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இரசாயனப் பொருள்களின் பயன்பாடு தொடர்பான கருத்தரங்கும் நடைபெற்றது.

ரொபிக்கன் சீட் நிறுவனம், ஒபெக்ஸ் கைரோ நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஏழாலை உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கும் இரசாயனப் பொருள் வழங்கும் நிகழ்வும் க.கனகசபை தலைமையில் இடம்பெற்றன.

இந்தக் கருத்தரங்கில் ரொபிக்கன் சீட் நிறுவனத்தின் தொழில்நுட்ப முகாமையாளரான.செல்வகுமாரால் பயிர்ச்செய்கையில் ஏற்படும் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதும், பீடை நாசினிகளின் பயன்பாடும், அவை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்ததுடன்-

அனோவா விதை உருளைக்கிழங்கை செய்கை செய்து உயர் விளைச்சல் பெறுவது தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

ஒபெக்ஸ் நிறுவன வர்த்தக முகாமையாளர் சமிந்த, பயிர்பாதுகாப்புக்கான இரசாயனப் பொருள்கள், குறுணி உரம் மற்றும் விதை பொருள்கள் போன்றவற்றை விவசாயிகளுக்கு வழங்கினார். (50- 201- 86)

## யாழ். மாவட்டத்தில் இதுவரை 57 மினிகோப் சிற்றிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தில் இதுவரை 57 மினி கோப் சிற்றிகள் திறந்து வைக்கப் பட்டுள்ளன.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது கிராமப் புறங்களில் மூன்று மினிகோப் சிற்றி விற்பனை நிலையங்களைத் திறந்து வைப்பதற்கு மஹிந்த சிந்தனையின் கீழ் ஒன்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தற்போது 57 மினிகோப் சிற்றி விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒன்பது கோப் சிற்றிகள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன என உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மேலும் கூறினார். (50-224)

## சர்வதேச முதியோர்தின விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.7

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறும் சர்வதேச முதியோர் தின விழாவின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும்,யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம்,யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் சிவஸ்ரீ யோ.குருசாமிக் குருக்கள்,அருட்தந்தை சவரிமுத்து ஜெயராட் ஆகியோர் ஆசியுரையை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் க. சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'தீர்க்க சுமங்கலி' என்னும் வில்லிசை நிகழ்வும் இடம் பெறும்.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (50-204-224)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 9 மதகுகள், 4 வடிகால்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தற்போது ஒன்பது மதகுகளும், நான்கு வடிகால்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் இத் தகவலை தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்புப் பணிகள் இவ் வருட இறுதிக்குள் நிறைவு பெறும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பண்ணை வீதியில் இரண்டு மதகுகளும், பருத்தித்துறை வீதியில் ஒரு மதகும், கொடிகாமம்,புலோலி வீதியில் ஒரு மதகும், யாழ்- கண்டி வீதியில் ஒரு மதகும், சாவகச்சேரி- புலோலி வீதியில் ஒரு மதகும், யாழ் -மானிப்பாய்-காரைநகர் வீதியில் இரண்டு மதகுகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட வல்லை- உடுப்பிட்டி வீதி, யாழ். பலாலி வீதி, வல்லை தெல்லிப்பழை வீதி, யாழ். ஓட்டுமடம் போன்ற பகுதிகளில் உள்ள நான்கு வடிகால்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (50- 224)

## மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்த பாடசாலைகளில் சஞ்சிகைகள் வெளியிட வேண்டும்

### செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரை

யாழ்ப்பாணம், ஒக்.7

மாணவர்களை நல்ல பண்புள்ள, அறிவுள்ள பிள்ளைகளாக வளர்க்கவும், அவர்களின் செயற்பாட்டை மேம்படுத்தவும் வருடா வருடம் பாடசாலைகளால் சஞ்சிகைகள் வெளியிடப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் 'பிரகாசம்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரையையும், வெளியீட்டுரையையும் நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு நல்ல தலைமைத்துவ நிர்வாகம், சேவைமனப்பான்மை கொண்ட ஆசிரியர்களின் செயற்பாடு, முயற்சியுள்ள மாணவர்களின் செயற்பாட்டுத்திறன் என்ற மூன்று அம்சங்கள் தேவையாகும்.

இம்மூன்று அம்சங்களையும் ஒருங்கிணைத்துச் செயற்பட்டமையால் இன்று இந்த சஞ்சிகையை இப்பாடசாலை வெளியிடுவதற்கு உந்துசக்தியாக இருந்துள்ளது.

இந்த மூன்று அம்சங்களில் மிகத் திறமையாகவும் கண்டிப்பாகவும் நின்று தனது தலைமைத்துவத்தினையும் நிர்வாகச் செயற்பாட்டினையும் மேற்கொண்ட பாடசாலை அதிபர், திருமதி ச.யோகேஸ்வரன் பாராட்டுக்குரியவர்.

இப்பாடசாலை ஆசிரியர் குழாம் மற்றும் மாணவர்களின் முயற்சியும் இம்மாதிரியான ஒரு சஞ்சிகை வெளியீட்டை சிறப்பாகக் கொண்டாட உதவியுள்ளது.

முயற்சி உள்ள மாணவர்கள் என்றும் சோம்பலாக இருக்க மாட்டார்கள். இம்மாதிரியான வெளியீட்டின்மூலம் இப்பாடசாலை பற்றிய வரலாற்றை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எந்தப் பாடசாலையாக இருந்தாலும் வாய்மூலம் எதையும் எடுக்கூறாமல் தமது பாடசாலையின் வரலாற்றை மற்றவர்களும் அறியக்கூடிய முறையில் ஆவணப்படுத்தினால், எதிர்காலச் சந்ததியினருக்கு பாடசாலைகளின் நிலைபற்றி அறியக் கூடிய வாய்ப்பிருக்கும்.

நல்ல எண்ணம் மனதிலே இருந்தால் நல்ல செயற்பாடுகளை நாம் செய்யலாம். எக்காரியத்தையும் செய்யும்போதும் இக்காரியம் என்னால் வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் மனதில் கொள்ளவேண்டும்.

இக்காரியத்தை என்னால் செய்ய முடியாது என்ற எண்ணம் மனதில் தோன்றினால் அக்காரியத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியாது- என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சங்கானைக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் துரை எங்கரசு இச் சஞ்சிகை வெளியீட்டின் மூலம் இப்பாடசாலையின் வளர்ச்சியும், மாணவர்கள், ஆசிரியர் மற்றும் அதிபரின் செயற்பாட்டையும் நன்கு அறியக்கூடியதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர் நா.பாலகிருஷ்ணன், கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204-29)




## தொண்டர் ஆசிரியர்களின் ஒன்று கூடல் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பு[illegible] உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 5 வருடங்களாக நிரந்தர நியமனத்திற்காகப் போராடுகின்றனர். இதனைக் கல்விச் சமுதாயம்'மற்றும் அரசியல்வாதிகள் உதாசீனப்படுத்துகின்றனர். தேர்தல் காலத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அலுவலகத்தில் கல்வி அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதி மொழியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் தொண்டர் ஆசிரியர்கள் நிலை குறித்து இ[illegible] திமுடிவை எடுக்கும் நோக்கில் அனைத்[illegible] தொண்டர் ஆசிரியர்களையும் புதிய உயர்[illegible]ல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு யாழ்.மாவட்ட தொ[illegible]ர் ஆசிரியர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுக் கழகங்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள்

பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு சமூக சேவைகள் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கிரிக்கெட்டுக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் கழக உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-111)


## இரண்டின் பலம்



ஒரு குழந்தையின் முதல் இரண்டு வருடங்களிலும் போஷாக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. குறைந்தது 6 மாதங்களாவது குழந்தைக்கு தாய்ப்பால் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. அதனைத் தொடர்ந்து மரக்கறிகள், பழங்கள் மற்றும் மீன் போன்ற போஷாக்கு உணவு வகைகளையும் 2 வயதுவரை வழங்குதல், உங்கள் குழந்தையின் சந்தோஷமான மற்றும் ஆரோக்கியமான வாழ்விற்கு வித்திடுகிறது.

EVERY ONE Save the Children (E-1001)


## தவறிவிட்டது

தேவாலய வீதி, அராலி வடக்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த இராசையா றொயிஸ் றொஷிந்தன் என்பவருடைய தே.அ.அ.(இல. 870111681V) 2-10-2009 அன்று யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.P.: 0774196287 இலக்கத்திலோ, மேற்படி முகவரியிலோ தொடர்பு கொள்ளவும். (89698)

## விற்பனைக்குண்டு

உள்ளூர் இன பசுவும் கன்றும் அத்துடன் சினைப்படுத்தக்கூடிய காளை நாம்பனும் விற்பனைக்குண்டு. தொடர்பு : அரசரத்தினம் சயந்தன், அச்செழு மத்தி, நீர்வேலி.

## வீடு விற்பனைக்கு

இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் இரண்டு பரப்புக் காணியில் சகல வசதிகளையும் கொண்ட மாடிவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212221134, 0775999746, 0212229119, 0775184725 (89581)

## SCOOTY PEP விற்பனைக்கு

அலுவலரின் தனிப்பாவனையிலுள்ள சிவப்பு நிற ஸ்கூட்டிப்பெப், 5G-Scooty Pep 7500 km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. மாறாத விலை 98500/= தொடர்பு - 0718474235 (விலை தொடர்பான எந்த விதமான விசாரணைகளிற்கும் உரையாடப்படமாட்டா).

## SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

A/L 2010 & 2011
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்

- Gr. I முதல் O/L வரை
- O/L Day Class
- Gr. 6 To 11 Eng. Med.
- Gr. 10 & 11 Eng. Lit
- புலமைப்பரிசில் (Gr. 4) ஞாயிறு பரீட்சைகளுடன்
- பேச, எழுத, வாசிக்க (புதிய பிரிவுகள்)
- சிங்களம்
- Spoken English (89597)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த, திரு.திருமதி திருவரங்கன் - சற்குணவதி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**தி.நகுல்ராஜ்**

அவர்களையும் இவர் கல்வி பயின்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் றெமிங்ரன் கல்வி வளர்சோலை நிர்வாகி, அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல்:
வே.திருவரங்கன் (அப்பா).

(89600)


## விசேட விலைக்கழிவு

வியாபார நிறுவனங்களுக்கான விளம்பரப் பலகைகள், பனர், ஸ்ரிக்கர் என்பவற்றை பிரதியாக்கம் செய்திட 1 சதுர அடி 100/= மட்டுமே.

மூர்த்தி டிஜிற்றல் கலர்லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வி/561523)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05.04.1922
உதிர்வு: 14.08.2008

மலர்வு: 11.02.1931
உதிர்வு: 19.09.2008

அமரர் **வயித்திலிங்கம் கதிர்காமத்தம்பி** (வல்வெட்டித்துறை)

திருமதி **கதிர்காமத்தம்பி தேவசிகாமணி** (வல்வெட்டித்துறை)

திதி: ஆடி மாத பூர்வபக்க திரயோதசி (03.08.2009)

எமது பெற்றோரின் முதலாம் ஆண்டு திவச சபிண்டீகரணக் கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (08.10.2009) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அமரர்களின் கப்பலுடையவர் கோயிலடி இல்லத்தில் நடைபெறும் என்பதனையும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வழைப்பினை ஏற்று மேற்படி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி: புரட்டாதி மாத அபர பக்க பஞ்சமி (08.10.2009)

அன்னையுந் தந்தையும் அகிலம்விட் டேகி
ஆண்டுஒ ன்றது கடந்தும்
மண்ணுல கில்லெம் மனத்திரை தனிலே
மடிந்திடா நிலையினில் வாழும்
பொன்னிக ரெங்கள் பெற்றோர் பாதம்
போற்றதும் என்றுமே பாரில்
என்னையா ளீசா எம்மருங் குரவரை
இருந்து நின் னடிஅடைக் கலமே

கப்பலுடையவர் கோயிலடி,
வல்வெட்டித்துறை.

மக்கள், மருமக்கள், சகோதர, சகோதரிகள் மற்றும் குடும்பத்தினர்.

## நினைவலைகள்

11ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு





| செல்லத்துரை பாலசுப்பிரமணியம் | | மதியாபரணம் பாலசுப்பிரமணியம் |
|---|---|---|
| 1930.05.01 | பிறப்பு | 1933.10.15 |
| 1998.03.11 | இறப்பு | 2008.10.18 |


ஈன்றவர்கள் எமைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் அன்பு எமைவிட்டு அகலாது
ஆண்டொன்று சென்றாலும் அணையாத
தீபமாய் ஒளிவீசும் அம்மா அப்பாவே!
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் இலக்கணமாய்
வாழவைத்த தெய்வங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்:- உதயணன் (C.T.B-இலங்கை), அசோகன் (ஜேர்மனி), மதிவதனி (நோர்வே).
மருமக்கள் :- ராகினி தேவி (ராதா), கலாதேவி (ஜேர்மனி), சசிகரன் (நோர்வே).
பேரப்பிள்ளைகள்:- மயூரன், அஜிக்கா, தமிழினி, நிருபன், அரோஜிக்கா, இனியன், அரோஜன்.

சிவபூதராயர் வீதி, சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (89596)

## மரண அறிவித்தல்

### மருதப்பு கனகரத்தினம்



நவாலியைச் சேர்ந்த மருதப்பு கனகரத்தினம் கடந்த (05.10.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் ராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் விஜிந்தனின் (குகா - தேவி கருமாரி நகைமாடம்) அன்புத் தந்தையும், ராஜினியின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தவமணி மற்றும் நிர்மலாதேவி, பரமேஸ்வரி, சொக்கலிங்கம், மனோகரன், சுசிலாதேவி, ரஞ்சினிதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
தொ.பே.: 0773604712

தகவல்:
க. விஜிந்தன்
(குகா - மகன்).
(89588)


After A/L

மல்டிமீடியா பயிற்சிகள்

DVP Diploma in Digital Video Production

ADDP Adv. Diploma in Digital Pre-Press



ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு
- MS Office
- DTP (Type Setting)
- Web Design
- Computerised Accounting

Duration: 3 Months

New Batches on 9th, 13th, 15th October

காலம்: 3 மாதங்கள்
100% செய்முறைப் பயிற்சி
இலவச பாடநூல்கள்

டலி ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே !

Don't Settle for Less

2 in 1 Offer

Tally 9

VAT | P/L A/C | Balance Sheet | Payroll | Inventory | Audit | ERP Concept | POS | Excise

" Certified Computer Accountant " மற்றும் Tally நிறுவனம் வழங்கும் இரு சான்றிதழ்களைப் பெற்றிடுங்கள்

The World Largest Tally Academy

ASIAN - CSC COMPUTER EDUCATION

யாழ். நகர் 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

நெல்லியடி கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088, 077-3122198


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது கைதடி மத்தி வளர்மதி

நாவற்குளி, ஒக்.7

சாவகச்சேரி ''ஸ்கொட்'' கணனி நிறுவனம் தென்மராட்சி பிரதேச ரீதியில் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றியைத் தனதாக்கியது.

36 கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகமும், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் இந்த இறுதிப் போட்டி கடந்த 4 ஆம் திகதி வெகு விமரிசையாக நடைபெற்றது.

15 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லபீந்திரன் 18 ஓட்டங்களையும், பிரதீப் 12 ஓட்டங்களையும், ரகுமான் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

றொக்சன் 3 விக்கெட்டுக்களையும், தசிந்தன், லாவன், தர்சன் ஆகியோர் தலா இவ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு 80 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

சங்கர், குபேசன் தலா 15 ஓட்டங்களையும், நிசிந்தன் 07 ஓட்டங்களையும் கூடுதல் ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

தயானந்தன் 4 விக்கெட்டுக்களையும், பிரதீப் 02 விக்கெட்டுக்களையும், தயாநளன், சஞ்சீவன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இதனடிப்படையில் 06 ஓட்டங்களால் வெற்றிபெற்ற கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சியின் சம்பியனாகி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

வளர்மதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.தயானந்தன் சிறந்த பந்துவீச்சாளராகவும், நா.பிரதீப் ஆட்ட நாயகனாகவும், கு.கலைமகன் தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(50-288-207)

## முதியோர்களுக்கான போட்டிகள்

வலி. வடக்கு, ஒக்.7

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சர்வதேச முதியோர் தினம் மற்றும் மாற்று ஆற்றல் உடையோர் தின் விளையாட்டுப் போட்டிகள் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் முதியோர் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முதியோர்களான ஆண்கள்,பெண்களுக்கான கிடுகு பின்னுதல், பலூன் உடைத்தல், அப்பிள்பழம் சாப்பிடுதல், ஊசிநூல் கோர்த்தல் போட்டிகள் நடைபெற்றன.

மாற்று வலுவுள்ளவர்களுக்கான மூன்று சில்லு சையிக்கிளோட்டம்,ஓட்டப் போட்டி, பலூன் உடைத்தல் என்பனவும் இடம் பெற்றன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட மட்டதில் நடைபெறும் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (50-86)

## இன்றைய ஆட்டம்

வலி. வடக்கு,ஒக்.7

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையேயான சிநேகமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று புதன் கிழமை 1.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் 14,16,18,20 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன.

(50-86)

# பாடசாலைகளுக்கிடையிலான உதை பந்தாட்டம்; அத்தியார் இந்துவை வென்று அச்செழு சம்பியனானது

## மூன்றாம் இடத்தை உரும்பிராய் இந்து வென்றது

வலி.வடக்கு,ஒக்.7

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 18 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் சம்பியனாகியது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயமும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முதல்பாதி ஆட்டத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி முன்னணியில் காணப்பட்டது. முதல் பாதி ஆட்டம் முடிவடையும்போது அத்தியார் இந்துக் கல்லூரியின் பவிதாஸ், சர்மிலன் ஆகியோர் பெற்ற ஒவ்வொரு கோல் மூலம் இரண்டு கோல்களைப் பெற்று அந்த அணி முன்னணியில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்குப் பெரும் சவாலாக அமைந்தது. இரு அணிகளும் எப்படியும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் போட்டி ஆரம்பமாகியது.

போட்டி ஆரம்பமாகிய சில நிமிடத்தில் முதலாவது கோலை அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வீரன் கோபனன் அடித்தார்.

தொடர்ந்து போட்டி மிகவும் சூடு பிடித்துக் கொண்டது. மேலும் 02 கோல்களை சைவப்பிரகாச வித்தியாலய வீரன் ஜசீவன் அடித்து தனது அணியை முன்னிலைக்குக் கொண்டு சென்றார்.

மீண்டும் ஒரு கோலை கோபனன் அடித்து தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில் போட்டி நிறைவு பெற்றது.

போட்டி நிறைவில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் 4:2 கோல்கள் என்ற அடிப்படையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியை வெற்றிபெற்று கோப்பாய் கோட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை உரும்பிராய் இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது. (50- 86)



அல்வாய் மனோகரா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அதில் எடுக்கப்பட்ட படம்.

# உடுவில் பிரதேச முதியோர்களுக்கான போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு, ஒக்.7

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற முதியோர் மற்றும் மாற்றுவலு உள்ளவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு -

**கிடுகு பின்னுதல்**

தே.பரிமளம் (ஏழாலை தெற்கு), அ.மகேஸ்வரி (உடுவில் தென்மேற்கு), வை.பாறி (ஈவினை).

**பலூன் ஊதி உடைத்தல் (முதியவர்)**

சி.சிவராசா (இணுவில் வட கிழக்கு), அ.பேரின்பநாயகம் (குப்பிளான்), சி.செல்வமணி (குப்பிளான்).

**ஊசி நூல் கோத்தல் (முதியவர்)**

நா.இராகினி(சங்குவேலி), ஞா.அன்னம்மா (சங்குவேலி), வ.சிவலோகநாதன்(இணுவில் வட கிழக்கு).

**அப்பிள் பழம் சாப்பிடுதல் (முதியவர்)**

சி.சிவராசா (இணுவில் வட கிழக்கு), அ.இராசு (ஈவினை), சி.சிங்கராசா (ஏழாலை தெற்கு).

**ஓட்டப்போட்டி (ஆண்கள்)**

சி.சிவராசா (இணுவில் வட கிழக்கு), ச.மகாலிங்கம் (ஈவினை), சி.மகேஸ்வரன் (ஏழாலை தெற்கு).

**ஓட்டப்போட்டி (பெண்கள்)**

க.திருத்தேவி (ஏழாலை தெற்கு), இ.தவமணி (ஏழாலை தெற்கு), த.அருள்மலர் (சங்குவேலி).

இப்போட்டிகளில் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 8 கிராம முதியோர் சங்கங்கள் கலந்துகொண்டன. முதலாம் இடத்தை 20 புள்ளிகளைப் பெற்று ஏழாலை தெற்கு முதியோர் சங்கமும், 2 ஆம் இடத்தை 18 புள்ளிகளைப் பெற்று இணுவில் வட கிழக்கு முதியோர் சங்கமும், 3ஆம் இடத்தை 12 புள்ளிகளைப் பெற்று சங்குவேலி முதியோர் சங்கமும் பெற்றுக் கொண்டன.

(50-86)

# பெண்களுக்கான கபடிப் போட்டியில் மன்னாரை வீழ்த்தியது வவுனியா அணி

வலி.வடக்கு,ஒக்.7

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணி மிகவும் இலகுவான முறையில் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை வவுனியா மாவட்ட அணியே மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தியது.

வவுனியா மாவட்ட அணியின் வேகத்திற்கு ஈடுகொடுத்து விளையாடமுடியாத நிலையில் வவுனியா மாவட்ட அணி முதல் பாதி ஆட்ட நிறைவில் 31.04 புள்ளிகள் என்ற அடிப்படையில் நிறுத்தப்பட்டது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி புள்ளிகள் பெற பெரு முயற்சி மேற்கொண்ட போதிலும் சாத்தியப்படாத நிலையே காணப்பட்டது.

வவுனியா மாவட்ட அணி இரண்டாம் பாதி ஆட்டத்திலும் வேகமாக விளையாடி தொடர்ந்து புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது. ஆட்ட நிறைவில் வவுனியா மாவட்ட அணி 64:07 புள்ளிகள் என்ற அடிப்படையில் மன்னார் மாவட்ட அணியை வெற்றிபெற்று வடமாகாணச் சம்பியனாகியது.

(50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்குக் கல்லூரியில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி மற்றும் உடற்பயிற்சிப் பயிற்றுவிப்பாளரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான தம்[illegible]துரை, கல்லூரியின் அதிபர் வண பிதா ஜே.ஏ.யேசுதாஸ் அடிகள் ஆகியோரை கல்லூரி[illegible] [illegible]த்திலும் மாணவர்களின் உடற்பயிற்சியின் ஒரு காட்சியை இரண்[illegible] காணலாம்.

(படங்கள்: [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



கண்மகிழ
05.05.1947

நெஞ்சம் நெகிழ
07.09.2009

## அமரர் சின்னத்தம்பி தியாகராசா

ஆறவில்லை தந்தையே எங்கள் இதயம்
ஆவி பிரிந்து நீங்கள் சென்ற துயரம்
இங்கு இனி வாழ்ந்திடும் எம் காலமெல்லாம்
எம் மனதில் என்றும் மாறாது சோகம்
மறப்போமா உங்கள் அன்பு முகத்தினையே
மாறுமோ எங்களது மனத்தின் துன்பம்
அமுதுடனே அறிவதுவை தினமும் ஊட்டி
ஆசையாய் எமைவளர்த்து சிறப்பாய் வாழ்வித்து
தந்தை என்ற சொல்லுக்குத் தரணியில் இலக்கணமாய்
தன்னலம் கருதாது எம் நலத்திற்காகப் பாடுபட்டு
வளமுடனே எம்மை வாழவைத்த தெய்வமே!
வாய்விட்டழுகின்றோம் விண்ணுக்கு நீங்கள் சென்றதனால்
வையகத்தில் நாங்கள் வாழும் காலமெல்லாம்
நித்தமும் உங்களை நினைத்தே வாழ்வோம்
உற்ற நல்ல தெய்வம்போல் துணையிருந்து இவ்
உலகத்தில் எமைக் காப்பீர் அப்பா!
கண்ணகை அம்மன் அருகிருந்து
காவலாய் எம்மைக் காப்பீர் அப்பா!

கடந்த 07.09.2009 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக் கிரியைகளின்போது எமக்கு உறுதுணையாய் நின்ற உற்றார், உறவினர்களுக்கும் அயலவர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் என்பனமூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மலர்வளையம், கண்ணீர்அஞ்சலி என்பன மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் யாழ்ப்பாணத்திலும் பிறநாடுகளிலும் எம் உறவுகளோடு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.10.2009 )புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்**
**இல.100, சீனிவாசகம் வீதி, கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடும் நோய் ஏற்படும் காரணத்தை வெளிக்கொணரும் அனுசேப துகள்கள்



எஸ். பேராசிரியன்

உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள் ஏற்படும் காரணத்தை உணவு சமிபாடு அடையும் வேளை உருவாகும் அனுசேப துகள்கள் வெளிக்கொணர்தல் சாத்தியம் என சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

லண்டன் இம்பீரியல் கல்லூரி, சிக்காக்கோ வடமேல் பல்கலைக் கழகம், ஜப்பான் தேச சிகா பல்கலைக் கழகம், சீன தேச மருத்துவ அக்கடமி ஆகியன சமிபாட்டுத் தொகுதியில் விளையும் அனுசேப துகள்களையிட்டு விரிவான ஆய்வுகள் மேற்கொண்டிருந்தன. இவ் ஆய்வுகள் நோய் தோன்றுவதற்குரிய சாத்திய காரணங்களையிட்டு புதிய ஒளியைப் பாய்ச்சியுள்ளன. ஒரு மனிதனின் குருதியில் அல்லது சிறுநீரில் உள்ள சமிபாட்டு உற்பத்திப் பொருள்களாகிய துகள்களின் வெவ்வேறு மாற்றமடையும் மட்டங்களை அவர்கள் நுணுக்கமாக ஆராய்ந்திருந்தார்கள். 'இச் சிறு துணிக்கைகள் குறியீடுகளாக, உணவு முறைகளும் வாழ்க்கை நடத்தைகளும் எவ்வாறு சில நோய்கள் பீடிப்பதற்கு முக்கிய பங்களிப்பு நல்கின்றன என்பது பற்றி பெருமளவு தகவலை வழங்குகின்றன' என்கிறார் சீன ஆய்வாளர்.

இந்த ஆய்வு இங்கிலாந்து, அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 4,630 நபர்களை வைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களது சிறுநீர் மாதிரிகளைச் சேகரித்து, ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள நபர்களின், அவர்களின் பௌதீக இடம் வேறுபட்டிருந்தாலும், சிறுநீரில் அனுசேப துணிக்கைகள் ஒப்பானதாக காணப்பட்டவர்கள் அனைவரும் இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

மாறாக, ஜப்பான் மற்றும் சீன தேசத்தைச் சேர்ந்த நபர்கள் வெவ்வேறு சத்து துணிக்கைகளைக் கொண்டிருந்ததை ஆய்வுப் பதிவுகள் எடுத்துக்காட்டின. மேலும் அவர்களது நோய் பீடிப்பிலும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தேச மக்களை விட பெரிதும் வித்தியாசம் காணப்பட்டது.

ஆச்சரியப்படும் வகையில் அமெரிக்க நாட்டில் வாழும் ஜப்பானியர்களின் ஆய்வு முடிவுகள் மற்றைய அமெரிக்க மக்களினது போன்று காணப்பட்டன. இருப்பினும் ஜப்பானில் வாழும் அவர்களது உறவினர்களது தரவுகளை விட பெரும் வித்தியாசம் காணப்பட்டது. எனவே சமிபாட்டு முறையை தீர்மானிப்பதற்கு வாழ்க்கை முறை பெரிதும் காரணியாக இருக்கிறது.

எனவே, குருதி அமுக்கம் போன்ற பெரும் ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றதென எமது சமிபாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய முறைகளை ஆராய்வதன் மூலம் மிக தெட்டத் தெளிவாக புரிந்து கொள்ளுதல் சாத்தியம். இவ்வகை ஆய்வு ஒரு நபரின் உணவு வகைகள் எவ்வாறு சில நோய்கள் உருவாகுவதற்கு பங்களிப்புச் செய்கின்றதென்பதை தெளிவாகத் தெரிவிக்கின்றது. இனிமேல் ஒரு நபரது 'டிஎன்ஏ' உடன் அனுசேப துணிக்கைப் பதிவுகளையும் இணைத்து ஆய்வுகளை மேற்கொண்டால் பல அரிய தகவல்கள் வெளிவரும் என நான் எண்ணுகின்றேன் என்கிறார் பேராசிரியர் ஜோமி.

- நன்றி குறோனிக்கல்.

# மனிதர்களுக்கு ஏன் மயிர் இருக்கிறது?

மனிதன் பாலூட்டும் பிராணியாவான். பாலூட்டும் இனங்கள் எல்லாவற்றுக்கும் சிறிது மயிர் உடம்பில் காணப்படுவது இயற்கை. ஏனைய பிராணிகளுக்கு மயிர் இருப்பதின் பயன்பாட்டை நாம் அறிவோம்.

உடம்பில் மயிர் இருப்பதன் முக்கிய பயன்பாடு என்னவெனில், உடம்பின் வெப்பத்தை அது பாதுகாப்பதாகும். வெப்ப மண்டல விலங்குகளுக்கிருக்கும் மயிர் சூரிய வெப்பத்தின் நேரடித் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது. சில மிருகங்களுக்கு பிடரியில் காணப்படும் மயிரானது அதன் கழுத்துப் பகுதிக்கு சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது. முள்ளம் பன்றியின் மயிர் தனது எதிரிகளுடன் மோதுவதற்குப் பயன்படுகின்றது. ஆனால், மனிதனுக்கு ஏன் மயிர் இருக்கின்றது; பயன்பாடுதான் என்ன?

ஒரு சிசு பிறந்தவுடன் அதன் உடம்பு மென்மையான மயிர்களால் நிறைந்திருக்கும். குழந்தை வளரும் போது இந்த மயிர் மாற்றம் பெற்று வளர்ந்தோருக்குரிய மயிராகின்றது. வளர்ந்தவர்களின் மயிரானது அவர்களின் உடம்பில் உள்ள ஒரு விசேஷ ஹோர்மோன்களையுடைய சுரப்பிகளால் ஒழுங்கு படுத்தப்படுகின்றது.

ஆண்களில் இந்த ஹோர்மோன் உடம்பிலும் முகத்திலும் மயிர்வளர உதவுவதுடன், தலையில் முடிவளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றது. பெண்களில் இந்த ஹோர்மோன் எதிர் மறையாக செயற்படுகின்றது. உடம்பில் குறைவான மயிரும் முகத்தில் மயிர் இல்லாமலும் தலையில் அதிக மயிர் வளரவும் உதவுகின்றது.

ஆண்களிலும் பெண்களிலும் காணப்படுகின்ற இவ்வித மயிர் வளர்ச்சியை 'செக்கன்டரி செக்ஸ் கெரக்டரிஸ்டிக்ஸ்'' (SECONDARY SEX CHARACTERISTICS) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இரண்டாம் நிலை பால் குணாம்சங்கள் என்று நாம் தமிழில் அழைக்கலாம். இருபால் வர்க்கங்களையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கான அம்சங்களாகும் இது.

ஆணின் முகத்தில் தோன்றும் தாடியானது அவன் ஓர் ஆண்மகன் என்பதைக் காட்டுவதுடன், அவனை அதிகாரமுள்ளவனாகவும் மதிப்புள்ளவனாகவும் காட்டுகின்றது. மனிதன் பரிணாம வளர்ச்சி பெற்ற காலத்தில் மழை நீரை, மற்றும் வியர்வையை உடம்பிலிருந்து வடித்து விடுவதற்கு மயிர் தேவைப்பட்டதாக சார்ள்ஸ் டார்வின் கருதினார்.

கண்புருவம், இமைகளில் மயிர் இருப்பது கண்களைத் தூசிகள், வண்டுகள், மற்றும் கொசுக்களிலிருந்து பாதுகாப்பதற்காகும். அவை முகத்துக்கு அழகைத் தருவனவாகவும் உள்ளன.

ரம்யன்

# தொற்றுநோய்ப் பரவலும் அதனைத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளும்

ஒரு தொற்றுநோயைப் பரப்பக்கூடிய நோயாளி ஒருவர் சமூகத்திலோ, தனியார் கிசிச்சை நிலையத்திலோ அல்லது வைத்தியசாலையிலோ கண்டுபிடிக்கப்படின், அந்த நோயாளியைப் பற்றியும் அவரது நோய் அறிகுறிகளையும் உடனடியாக நோயாளி, நோய் ஏற்படும்போது வசித்த பிரதேசத்துச் சுகாதார வைத்திய அதிகாரிக்குத் தெரியப்படுத்தல் அவசியமானதாகும். முக்கியமாக இது, ஒரு நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்தியர் அல்லது சுகாதாரத் துறைசார்ந்த உத்தியோகத்தர்களின் கடமையாகும். இது நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையின் நடைமுறையில் உள்ள (The quarantine and Prevention of disease ordinance of 1897) சட்டவாக்கலான நோயாளியைத் தடுத்து வைத்தல் அல்லது நோய்வராது தடுத்தல் சட்டத்தில் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. ஒரு தொற்றுநோயுடைய நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும்போது இந்நோய் தொற்றிப் பரவும் அபாயம் இருக்கையில் அதனைச் சரியான மருத்துவ அதிகாரிக்குத் தெரியப்படுத்தாவிடின், குறிப்பிட்ட அதிகாரிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு ஆகக்கூடிய இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்க இச் சட்டம் வழிசெய்கிறது. அத்துடன், காலத்துக்குக் காலம் பரவிக்கொண்டிருக்கும் - பரவும் என நம்பக்கூடிய நோய்களைப் பற்றிய தகவல்கள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் பின்னர் தேசியரீதியாகவும் திரட்டப்பட்டு அவற்றை ஆராய்ந்து கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் மருத்துவ அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டிய நோய்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுப் பின்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. இப்பட்டியல் Notifiable diseases எனக் குறிப்பிடப்படும்.

இவ்வாறான நோய்ப்பரம்பலை ஆரம்பத்திலே கண்டுபிடித்து அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைளை எடுக்கவேண்டிய கட்டமைப்பினைச் சரியாக ஒரு நாட்டின் சுகாதார சேவை கொண்டிருப்பின் அந்நாடு தொற்றுநோய்களின் தாக்கத்தைக் குறைந்தளவு வளங்களுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். இதற்கான சரியான அடித்தளமும் கட்டமைப்பும் இலங்கையில் 1920 களில் இடப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தொற்று நோய்க்கட்டுப்பாட்டுக்காக மாவட்ட தொற்றுநோய்த் தடுப்பு அதிகாரி, மாகாண தொற்றுநோய் தடுப்பு அதிகாரி மற்றும் தேசிய மட்டத்தில் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவும் என்பன ஏற்படுத்தப்பட்டன. **(தொடரும்)**

டாக்டர் இ.சுரேந்திரகுமாரன்
விரிவுரையாளர், சமுதாய மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




உணவே மருந்து

# மூலநோய்க்கு மூலிகை உணவுகள்

பிள்ளைக்கற்றாளைக்கறி

பிள்ளைக்கற்றாளை அல்லது சோற்றுக் கற்றாளை என்பது எமது பிரதேசத்தில் பரவலாகக் காணப்படும் ஒரு மூலிகை யாகும். இதன் மருத்துவ குணம் தெரியாமல் சிலர் இதை வீடுகளில் அழகுக்காக வளர்க்கிறார்கள். இச்கற்றாளையின் இலை தடித்துச் சதைப்பற்றாக இருக்கும். இலையை இரண்டாகப் பிளந்தால் அதன் நடுவில் ஜெலி போன்ற வழுவழுப்பான பகுதி காணப்படும். அதனைக் கற்றாளைச் சோறு என அழைப்பர். அக்கற்றாளைச் சோற்றைச் சிறு துண்டுகளாக நறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். அது மிகவும் கசப்புச் சுவையுள்ளதாக இருக்கும். அதனை 7, 8 தரம் நீர்விட்டு நன்கு கழுவ வேண்டும். அவ்விதம் கழுவுவதனால் அதன் கசப்புச் சுவை குறையும். அதன்பின்னர் அதற்கு மிளகு சீரகம் சிறிதளவு அரைத்துச் சேர்க்கவும். உப்பும், புளியும் அளவாகப் போட்டு தேங்காய்ப்பாலும் விட்டு கறியாகச் சமைத்துச் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

குறிப்பு:

பிள்ளைக்கற்றாளையில் 'அந்திராக் குவினோன் கிளைக்கோசைட் (அலோ யின்)' என்னும் நீரில் கரையக்கூடிய ஓர் இரசாயனப் பொருள் உள்ளது. அது மலத்தை அதிகளவில் (பேதிபோல) போகச் செய்யக்கூடியது. எனவே 7, 8 தரம் நீரில் கழுவும்போது அது [illegible] நீரில் கரைந்து வெளியேறிவிடும். அதன்பின்னர் கறியாகச் சமைத் துண்ணும்போது இலகு மலமிளக்கிச் செய்கையைக் காட்டும். கடும் பேதியை ஏற்படுத்தமாட்டாது.

கற்றாளைச்சோறு குளிர்மையும் சீத வீரியமும் உள்ளது. எனவே உஷ்ணம் சம்பந்தமான பல நோய்களுக்கு - மூல நோய், மூலச்சூடு, அழல்வாதம் எனப் படும், கை கால் எரிவுள்ளவர்கள், மலச் சிக்கல், சிறுநீரடைப்பு, சிறுநீர் எரிவு உள்ளவர்களுக்கும் இது நல்ல உணவு.



கரணைக் கிழங்கு அரையல்

மூலநோய்க்குக் கரணைக் கிழங்குக்கறி நல்லது என்பது பலருக்கும் தெரியும். ஆனால் கறியிலும் பார்க்க அரையலாக அரைத்துச் சாப்பிடுவது மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும் கரணைக் கிழங்கின் தோலை அகற்றிச் சிறுதுண்டுகளாக நறுக்கி எடுத்து ஒரு சட்டியில் நீர்விட்டு உப்பும் போட்டு அவித்து எடுக்கவும். அத்துண்டுகளை நெய்விட்டுப் பொன்னிறமாக வறுத்து. அத்துடன் 1 தேக்கரண்டி உளுத்தம்பருப்பு, மிளகு, சீரகம் ஒரு சிறங்கை தேங்காய்ப்பூ என்பவற்றையும் சேர்த்து வறுத்து எடுத்துக்கொள்ளவும். தேவையான உப்பு சேர்த்து அம்மி அல்லது மிக்ஸியில் அரைத்து எடுத்துக்கொள்ளவும். தேசிப் புளி சேர்த்து சோற்றுடன் கலந்து சாப்பிடவும்.



டாக்டர்.சே.சிவசண்முகராஜா [M.D(S)]
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை.

2

MK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - அம்பாறை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வரலாறு - I

**33-T-I**

* **இலக்கம் 01 தொடக்கம் 03 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழ்வரும் இலங்கைப் படத்தைப் பயன்படுத்துக.**




01. எருது நீக்கிய சந்திர வட்டக்கல் அமையப்பெற்றுள்ள ஓர் இடம்,
1) A 2) B
3) C 4) D

02. அழகிய மலை எனப்படும் இராசதானி அமையப்பெற்றுள்ள இடம்,
1) B 2) A
3) D 4) E

03. ''தந்தேயே நீ தேடிய செல்வம் என்ன'' இதற்குப் பதில் கூறும் குளம்,
1) G 2) H
3) A 4) C

04. மன்னன் தேவநம்பியதீசனுக்கு தேவநம்பிய என்ற பட்டத்தைக் சூட்டிய அரசன்,
1) பாண்டுகாபயன். 2) எல்லாளன்.
3) அசோகன். 4) பிம்பிசாரன்.

05. சிகிரியாக் குன்றின் உயரம் பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது?
1) 330m 2) 1240m 3) 765m 4) 180m

06. கண்டி இராச்சியம் பிரித்தானியர்களால் கைப்பற்றப்படுவதற்கான காரணம்,
1) மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கொடுங்கோல் ஆட்சி.
2) ஜோன் டொய்லியின் எதிர்ப்பு.
3) மக்கள் மன்னனுக்கு ஆதரவாக இருந்தமை.
4) யூரி சபையை அறிமுகப்படுத்தியமையால்.

07. பிரித்தானியர்களால் துன்புறுத்தப்பட்டு காதில் இருந்து இரத்தம் சிந்திய கண்டி அரசனின் மனைவி,
1) விகார மகாதேவி. 2) ரங்கம்மா.
3) சித்திராதேவி. 4) விமலாதேவி.

08. ஐக்கிய அமெரிக்காவின் தேசியக்கொடியில் காணப்படும் 13 கீற்றுகள் (கோடுகள்) உம் 50 நட்சத்திரங்களும் குறிப்பதன் கருத்து யாது?
1) 13 அரசியல் பிரிவுகளும் 50 தலைவர்களும்.
2) 13 குடியேற்றங்களும் 50 பிரதேசங்களும்.
3) 13 அமெரிக்கரின் குடியேற்றங்களும் 50 ஐக்கிய அமெரிக்காவின் பிரதேசங்களும்.
4) 13 ஜனாதிபதிகளும் 50 பிரதமர்களும்.

09. புதுமையான கால்வாய் என அழைக்கப்படும் கால்வாய்,
1) எலஹர கால்வாய். 2) மினிப்பே கால்வாய்.
3) ஜய கங்கை. 4) சுது கங்கை.

10. கிழக்குலகின் தானியக் களஞ்சியம் என்ற பெயரை இலங்கை எக்காலத்தில் பெற்றுக் கொண்டது?
1) தம்பதெனியாக் காலம். 2) யாப்பகுவ காலம்.
3) பொலநறுவைக் காலம். 4) கண்டிக்காலம்.

11. ஐ.நா சபையின் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள இலை எம்மரத்துக்கு உரியதாகும்?
1) வெள்ளரச மரம். 2) நாமரம். 2) அரிசி மரம். 4) ஒலிவ் மரம்.

12. சிகிரியாவை பேணிப்பாதுகாத்து வரும் சர்வதேச இணைத்தாபனம் ஒன்றை தெரிவு செய்க.
1) யுனிசெப். 2) யுனெஸ்கோ.
3) உலக வங்கி. 4) பாதுகாப்பு வங்கி.

13. ''கோட்டைச் சிங்கம்'' என்ற நாமத்தைப் பெற்ற தலைவர்,
1) E.W. பெரேரா. 2) அனகாரிக தர்மபால.
3) சித்திலெப்பை. 4) D.P. ஜயதிலக்க.

14. ''வட்டகாமினி அபயன்'' என அழைக்கப்படுவது எந்த மன்னனைக் குறிக்கும்?
1) சங்கிலியன். 2) வலகம்பாகு.
3) துட்டகைமுனு. 4) தேவணம்பியதீசன்.

15. கண்டி இராச்சியம் தொடர்பான பிழையான கூற்று எது?
1) சாதி அமைப்பு முறை சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தது.
2) போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் மலையக மன்னர்களுக்கு பெரும் சவாலாக இருந்தமை.
3) நாயக்க வம்சத்தினிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டியே கண்டி இராச்சிய வீழ்ச்சிக்குரிய காரணமாகும்.
4) கண்டி சமூக அமைப்பு முறையினுள் பாரம்பரிய சம்பிரதாயங்களும் பௌத்த சமயமும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

16. யாழ்ப்பாணத்தில் சங்கிலியனுக்கு எதிராக படையெடுத்த போர்த்துக்கேயப் படையின் பெயர் என்ன?
1) தலசர்த்தா. 2) ஒலிவேரா.
3) செனவியா. 4) தென்னிந்திய படையெடுப்பு.

17. மாசல் உதவித் திட்டத்தின் பிரதான நோக்கம்,
1) முதலாம் உலகப் போரில் பேரழிவுக்குள்ளான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மேம்பாட்டை மீண்டும் விருத்தி செய்வதாகும்.
2) ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார மேம்பாட்டை விருத்தி செய்வதாகும்.
3) 2ஆம் உலகப் போரில் பேரழிவுக்குள்ளான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மேம்பாட்டை மீண்டும் விருத்தி செய்வதாகும்.
4) கீழைத்தேய நாடுகளின் பொருளாதார மேம்பாட்டை விருத்தி செய்வதாகும்.

18. சுற்றாடல் மாசடைவதை இழிவளவாக்குவதற்கு முக்கிய தடையாக இருப்பது,
1) விரைவான சனத்தொகைப் பெருக்கம்.
2) புதிய நகர்ப்புற நிர்மாணம்.
3) மனிதனின் கவனயீனமான நடத்தை.
4) புதிய கண்டுபிடிப்புக்கள்.

19. 2ஆம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஆண்டு,
1) 1633 2) 1638 3) 1733 4) 1783

20. கடற்பாதுகாப்பிற்கும் யுத்த நடவடிக்கைகளுக்கும் இலங்கையை முக்கிய தளமாகக் கருதி எமது நாட்டை கைப்பற்றியோர்,
1) இந்தியர். 2) போர்த்துக்கேயர்.
3) ஒல்லாந்தர். 4) ஆங்கிலேயர்.

21. ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள புத்தர் சிலையின் பெயர்,
1) சாரனாந்த்த புத்தர் சிலை. 2) பாமியன் புத்தர் சிலை.
3) சாமாதி நிலை புத்தர் சிலை. 4) சயன நிலை புத்தர் சிலை.

22. கண்டி இராச்சியம் முதன் முதலாக வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வரப்பட்ட வருடம்,
1) 1798 2) 1802 3) 1815 4) 1818

23. ''மருத்துவ சிறப்பறிஞர்'' எனப் புகழப்பட்ட மன்னன்,
1) வசபன். 2) தாதுசேனன்.
3) புத்ததாச. 4) சப்புமல் குமாரயா.

24. நிரல் - 1
1 - சர்வசன வாக்குரிமை
2 - பிரடரிக் நோத்
3 - நிலமானிய முறை நீக்கப்படல்
4 - பாராளுமன்றச் சுதந்திரம் கிடைத்தல்

நிரல் - 11
A → 1833
B → 1948
C → 1931
D → 1798

நிரல் - 1இல் உள்ள விடயங்களுடன் நிரல் - 11இல் அவற்றுடன் தொடர்புடைய ஆண்டுகளை தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடை அவ்வொழுங்கில்
1) A, B, C, D 2) B, A, C, D 3) C, D, A, B 4) D, C, A, B

25. ஜப்பானிய முக்கிய நகரங்களான ஹிரோசிமா, நாகசாக்கி போன்ற இடங்களுக்கு ஐக்கிய அமெரிக்கா எவ்விமானத்தின் மூலம் குண்டு வீசியது?
1) A.T - 361 2) சுப்பபோட்டெஸ்.
3) கிட்டிக்கொக். 4) U.B 313

26. சோல்பரி யாப்புத் சீர்திருத்தங்களினால் புகுத்தப்பட்ட மாற்றம் பின்வருவனவற்றுள் எது?
1) சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
2) பாராளுமன்ற அரசாங்க முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
3) நிருவாகக் குழு முறைமை புகுத்தப்பட்டமை.
4) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்பட்டமை.

27. இண்டிகோ கிளர்ச்சியை சமாதானப்படுத்தி வைத்தத் தலைவர்,
1) சித்திலெப்பை. 2) மகாத்மா காந்தி.
3) ஆறுமுக நாவலர். 4) டி.பி.ஜாயா

28. 1ஆம் உலகப் போரின் பின்னர் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தை அமைத்த தலைவர் யார்?
1) வூட்ரோ லில்சன். 2) மகிந்த ராஜபக்ஷ.
3) ஜோசப் ஸ்டாலின். 4) கொபி அனான்.

29. நாசிச, பாசிச கொள்கைகளை கடைப்பிடித்த தலைவர்களாக முறையே,
1) பெனிட்டோ முசோலினி, ஹிட்லர். 2) ஹிட்லர், முசோலினி.
3) தடபாய் நபரோஜீ, பானர் ஜீ 4) காந்தி, ஆறுமுக நாவலர்.

30. 1857இல் பிரித்தானியருக்கு எதிராக நடைபெற்ற மிக மோசமான யுத்தம் சிப்பாய் கலகம் ஆகும். இது எந்நாட்டில் நடைபெற்றது?
1) பாகிஸ்தான். 2) ஆப்கானிஸ்தான்.
3) முல்லேரியா. 4) இந்தியா.

31. 2ஆம் உலகப் போரின்போது ஜப்பானியர் குண்டு வீசித்தாக்கிய பிரசித்திபெற்ற துறைமுகம் எது?
1) பேர்ன். 2) திருகோணமலை.
3) காலி. 4) மலபார்.

32. குளத்தின் மேலதிக நீரை வெளியெற்ற பயன்படுத்தும் பகுதி,
1) கலிங்கத்தொட்டி. 2) சுருங்கை.
3) அலைதாங்கி. 4) காவற் கல்.

33. சீனாவில் மாஓசேதுங் அவர்களால் 1959ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டம் யாது?
1) 5 ஆண்டுத்திட்டம். 2) முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்.
3) மகாவலி திட்டம். 4) கல்லோயா திட்டம்.

34. ஜப்பானிய முன்னேற்றத்துக்கு பங்களிப்பு செய்த வீரர்களுள் பொருத்தமற்றவராக கருதக்கூடியவர்,
1) நோபுனகா. 2) ஹிரே ஹித்தோ.
3) ஹித்தயோசி. 4) போஹிகாவாயியாஸ்.

35. மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என பிளவுபட்டது எப்போது?
1) 1ஆம் உலக யுத்தத்தின் பின்னர்.
2) வெர்சயில்ஸ் உடன்படிக்கையின்போது.
3) 2ஆம் உலக யுத்தத்தின் பின்னர்.
4) மல்வானை ஒப்பந்தத்தின்போது.

36. 1818இல் நடைபெற்ற ஊவா வெல்லச கிளர்ச்சியின்போது இரண்டு இலங்கையர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இவர்கள் எவ்விடத்தில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டனர்.
1) தும்பர். 2) அநுராதபுரம்.
3) போகம்பர. 4) கடுகஸ்தோட்டை.

37. அதிக நீளமான கல்வெட்டு நிசங்கமல்லனின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது. இக்கல்வெட்டின் பெயர் யாது?
1) கல்பொத்த. 2) தூண் கல்வெட்டு.
3) மெதிகரிய. 4) தம்புள்ள குகை கல்வெட்டு.

38. மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான புரட்சிகளுள் 1789இல் நடைபெற்ற புரட்சி எந்நாட்டில் இடம்பெற்றது?
1) இத்தாலி. 2) பிரித்தானியா. 3) பிரான்ஸ். 4) ஜப்பான்.

39. இளம் வயதில் துறவியாக வாழ்ந்தவரும் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவருமான மன்னன்,
1) தாதுசேனன். 2) குப்தன்.
3) இராஜேந்திரன். 4) நிமலசங்கன்.

40. போர்த்துக்கேயரினால் அறிமுகப்படுத்தப்பட்ட மதங்களுள் ஒன்று,
1) றோமன் கத்தோலிக்கம். 2) புரட்டஸ்தாந்து.
3) இந்து. 4) பௌத்தம்.

*''2009 க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்காக ... விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு''*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு - II

**33-T-II**

### பகுதி - I (கட்டாயமானது)

01. 1) அ. பின்வரும் இடங்களை உலகப்படத்தில் குறித்துக்காட்டுக.
01) றொக்கி மலை  02) ஜிப்றோட்டல் தொடுகடல்.
03) ஜேர்மனி  04) ஹவாய் தீவுகள்.
05) கங்கை நதி.  06) பபின் குடா.
07) கனேரிஸ் தீவுகள்.  08) பிரான்ஸ்
ஆ. பின்வரும் இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துக்காட்டுக.
01) கலாஓயா  02) தீகவாபி
03) தம்பதெனியா.  04) ஜம்புகோளப்பட்டணம்.
05) கோகர்ணம்  06) செங்கடகல
07) கொடவாய  08) கங்கசிறிபுர
09) கற்பிட்டி  10) அருவியாறு
2) கீழே A,B,C,D எனக்காட்டப்பட்டுள்ள படைப்புகளை முறையே குறிப்பிடுக.




3) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவைகளை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவுசெய்க.
A - பிரௌன்ரிக் கண்டியைக் கைப்பற்றுவதற்கு உதவியாக இருந்தவர்.
B - கி.பி 1344இல் இலங்கைக்கு வந்த முஸ்லிம் பயணி.
C - யாழ்ப்பாணத்தில் நல்லூர்க் கோவிலை அமைக்க தூண்டுதலாக அமைந்த மன்னன்.
D - ''கோட்டைச் சிங்கம்'' என்ற புனைப் பெயரை உடையவர்.
**(மகாத்மா காந்தி, E.W பெரேரா, ஜோன் டொய்லி, இபின் பதூதா, அறிஞர் சித்திலெப்பை, பரராசசேகரன்)**
4) பின்வரும் ஆண்டுகளுக்குரிய சம்பவங்களைத் தருக.
1. 1562  2. 1959  3. 1857  4. 1848

02. 1) தப்ரபேன், செரண்டீப், தம்பபண்ணி என்ற பெயர்களால் இலங்கையை வர்ணித்த நாட்டவர்களின் பெயர்களை முறையே எழுதுக.
2) மத்தியகால ஐரோப்பாவில் நிலவிய மானிய முறையின் அம்சங்கள் நான்கினைத் தருக.
3) மத்தியகால ஐரோப்பாவில் நிலவிய மானிய முறைவீழ்ச்சி அடைவதற்கான காரணிகள் இரண்டினை விவரிக்குக.
4) எமது நாடு வெளிநாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

03. அநுராதபுரக்காலத்தில் கீழே தரப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றியவர்களை எப்பெயர் கொண்டு அழைப்பர்?
1) A - தக்கிண தேசத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்.
B - படைகளுக்குப் பொறுப்பான அதிகாரி.
C - உறுகுணைப் பகுதி நிர்வாகத்திற்கு பொறுப்பான அதிகாரி.
2) புராதன இலங்கையின் அரசர்களுக்கான பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
3) அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் வளர்ச்சி பெற்ற வைத்தியசேவை இருந்தது என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.
4) புராதன கிராமாட்சி முறையில் நிலவிய ஜனநாயக அம்சங்கள் யாவை? என்பதை இரு உதாரணங்கள் தந்து விளக்குக.

### பகுதி - II

04. 1) பின்வரும் சம்பவங்கள் தொடர்பானவர்களின் பெயர்களை A,B,C என்ற ஒழுங்கில் எழுதுக.
A - 1815இல் கண்டியைக் கைப்பற்றும் போதிருந்த ஆளுநர்.
B - ரந்தனிவெல யுத்தத்தில் கண்டிப்படைகளால் கொல்லப்பட்ட தளபதி
C - நாயக்க வம்சமாக இருந்தபோதும் மலைநாட்டின் சமய கலாசார மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு தலைமைத்துவம் வழங்கிய மன்னன்.
2) 1815இல் கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றுவதற்கு உதவிய நான்கு காரணிகளைத் தருக.
3) 1818இல் கண்டி மக்கள் பிரித்தானியாவின் உடன்படிக்கையை மீறிச் செயற்பட்டமைக்கு இரண்டு காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.
4) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட இரு சுதந்திரக் கிளர்ச்சிகளையும் இடம், ஆண்டுகளுடன் குறிப்பிட்டு, இக்கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர்களையும் பற்றி அட்டவணைப்படுத்துக.

05. 1) இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் மூவரின் பெயரை ஆண்டுகளுடன் குறிப்பிடுக.
2) இலங்கையின் ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்குரிய தகைமைகள் 4 ஐக் குறிப்பிடுக.
3) ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு அரசியல் கட்சிமுறை இருத்தலின் முக்கியத்துவத்தை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.
4) பாராளுமன்ற ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கு வாக்குரிமை உடையோரும், தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளும் பொறுப்புமிக்கவர்களாக ஏன் செயற்பட வேண்டும் என்பதை இரு விடயங்கள் கொண்டு விளக்குக.

06. 1) A - ஆலாட்சி அதிகாரி  B - ஜனாதிபதி  C - சபாநாயகர்
ஆகிய பதவிகளை ஏற்படுத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் பெயர்களை முறையே குறிப்பிடுக.
2) 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு யாப்பில் உள்ளடக்கப்பட்ட 4 அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
3) பாராளுமன்ற ஆட்சி முறையானது பொதுமக்களின் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த முறையாகும். இக்கூற்றினை இரண்டு காரணிகளால் விவரிக்குக.
4) ஜனநாயக நாட்டில் தனிப்பட்ட குடிமகன் தேர்தலில் தனி வாக்குரிமையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என இரண்டு காரணங்கள் தந்து விளக்குக.

### பகுதி - III

07. 1) முதலாம் உலகப்போரின் பின்பு அமைக்கப்பட்ட சர்வதேச சமாதான அமைப்பு ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக.
2) ஜேர்மனியின் சட்டசபைக்கு வழங்கப்படும் பெயர் யாது?
3) ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகப்போரில் ஈடுபடாமைக்குரிய காரணத்தையும், 1917இல் ஐக்கிய அமெரிக்கா 1ஆம் உலகப்போரில் ஈடுபட்டமைக்குரிய காரணத்தையும் குறிப்பிடுக.
4) வேர்சயில்ஸ் உடன்படிக்கை மூலம் எழுதப்பட்ட உடன்படிக்கைகளுள் இரண்டை விளக்குக.

08. 1) பல நூற்றாண்டுகளாக ஒரே பூமியாக இருந்த இந்தியா இரு பிளவு நாடுகளாகப் பிரிந்து செல்லப்பட்டது. இது யாருடைய [illegible] பட்டது?
2) ஜேர்மனியில் சர்வாதிகாரம் மேலோங்குவதற்குக் காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3) சோவியத் ஒன்றியம் உலக வல்லரசாக எழுச்சி பெறுவதற்குரிய இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
4) அணிசேரா இயக்கத்தின் கொள்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

09. 1) மனித உரிமைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 1789ஆம் ஆண்டில் இடம்பெற்ற புரட்சி யாது?
2) இப்புரட்சியுடன் தொடர்புடைய மன்னனுடைய பெயரையும் எந்த நாட்டை ஆட்சி செய்தார் என்பதையும் குறிப்பிடுக.
3) முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கான உடனடிக் காரணத்தையும், ஏனைய காரணங்களுள் ஒன்றையும் விளக்குக.
4) பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இத்தாலி முசோலினியினால் மேற்கொண்ட முயற்சிகளுள் இரண்டை விளக்குக.

-நிறைவுற்றது-

ஆசிரியர் : ஜனாபா எம்.யூ.ஏ.றசீட்,
சது/அல் அர்சத் மகா வித்தியாலயம், சம்மாந்துறை.
தொ.பே.இல: 0775500324.

## விஞ்ஞானத்தின் தொடர்ச்சி.....

### பகுதி B - கட்டுரை வினாக்கள்

### இரசாயனவியல்

03. கீழ்வரும் அட்டவணை 2ஆம், 3ஆம் ஆவர்த்தணங்களில் ஒழுங்கின்றி அமைந்துள்ள 10 மூலகங்களையும் அவற்றின் அணுவெண்களையும் காட்டுகின்றது. அணுவெண் nஐக் கொண்ட மூலகம் 2ஆம் ஆவர்த்தணத்தில் 6ஆம் கூட்டத்தில் அமைந்துள்ளது எனின், கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளை அட்டவணையிலிருந்து தெரிக.

| மூலகம் | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அணுவெண் | n-5 | n-4 | n-2 | n | n+1 | n+3 | n+4 | n+6 | n+8 | n+9 |

01) 1ஆம் கூட்டத்தில் அமைந்துள்ள இரு மூலகங்களைப் பெயரிடுக? இவற்றில் அணுவாரை கூடிய மூலகம் எது?
02) மூலகம் D கொண்டுள்ள இயல்புகளைக் காட்டக்கூடிய இன்னொரு மூலகத்தைக் குறிப்பிடுக.
03) 3 சக்தி மட்டங்களைக் கொண்ட மூலங்களைப் பெயரிடுக.
04) மேலுள்ளவற்றில் அலசன் கூட்டத்தைச் சேர்ந்த இரு மூலகங்களைப் பெயரிடுக.
05) ஒரு இலத்திரனை இழப்பதன் மூலம் வலுவளவு ஒன்றைக் காண்பிக்கும் இரு மூலகங்களைப் பெயரிடுக.
06) ஓர் இலத்திரனைப் பெறுவதன் மூலம் வலுவளவு ஒன்றைக் காண்பிக்கும் இரு மூலகங்களைப் பெயரிடுக.
07) மேலுள்ள அட்டவணையில் உலோக இயல்பைக் காட்டக்கூடிய இரு மூலகங்களைப் பெயரிடுக.
08) மூலகங்களான F, J என்பன சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது?
09) மேலுள்ள மூலகங்களால் ஆக்கப்படும் சேர்வை எவ்வகையான பிணைப்பைக் கொண்டிருக்கும்?
10) அவ்வகையான பிணைப்பைக்கொண்ட சேர்வையின் இயல்புகள் இரண்டு தருக.
11) மூலகங்கள் C, D என்பன சேர்த்து வாக்கும் சேர்வையின் சூத்திரத்தையும் அதன் பிணைப்பு வகையையும் தருக.
12) மேலுள்ள சேர்வையின் கட்டமைப்பை லூயிஸின் கட்டமைப்புக்கேற்ப வரைந்து காட்டுக.

04. A. திரவப்பெற்றோலிய வாயுவான புறம்பேன் ($C_3H_8$), ஒட்சிசனுடன் ($O_2$) பூரண தகனமடைந்து காபனீரொட்சைட்டு, ($CO_2$) நீராவியையும் ($H_2O$) மாத்திரம் தோற்றுவிக்கின்றது.
($C = 12, H = 1, O = 16$ எனக்கொள்க)
1) மேலுள்ள தாக்கத்திற்கான ஈடுசெய்யப்பட்ட சமன்பாட்டைத் தருக.
2) 22 கிராம் புறப்பேன் பூரண தகனமடையும்போது வளியுடன் சேரும் $CO_2$ வாயுவின் திணிவைக் காண்க.
3) 11கிராம் $C_3H_8$ பூரண தகனமடைவதற்குத் தேவையான $O_2$இன் திணிவைக் காண்க.
4) 9கிராம் நீராவியைப் பெறுவதற்கு எத்தனை கிராம் $C_3H_8$இனை தகனமடையச் செய்யவேண்டும்.

B. இன்றைய காலத்தில் நியமிக்கப்பட்ட கரைசலின் பயன்பாடுகளானது மருத்துவத்துறை, மற்றும் பல்வேறு துறைகளில் பிரபல்யமாக கையாளப்படுவதனை அவதானிக்கலாம்.
1) நியமிக்கப்பட்ட கரைசல்கள் என்றால் என்ன?
மாணவன் ஒருவன் ஆய்வுகூடத்தில் $0.5 moldm^{-3}$செறிவுடையதும் 250.ml அளவு கொண்டதுமான சோடியம் காபனேற்றுக்கரைசலை நியமிப்பதற்கு பிண்ணியுள்ளான். எனின், பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
($Na = 23, C = 12, O = 16$ எனக்கொள்க)
2) மேற்படி கரைசலைத் தயாரிப்பதற்கு தேவையான பொருட்களைப் பட்டியற்படுத்துக.
3) மேற்படி கரைசலைத் தயாரிப்பதற்குத் தேவையான $Na_2CO_3$இன் திணிவைத் கணிக்குக.
4) மேற்படி நியமிப்புக்கரைசலை நீர் தயாரிக்கும் படிமுறைகளைத் தெளிவாகத் தருக.

### பௌதிகவியல்

05. A. கிரிக்கெட் ஆடுகளம் ஒன்றில் துடுப்பாட்ட வீரன் நிற்பதைப் படம் காட்டுகிறது. துடுப்பில் A,B,C என்பன 3 புள்ளிகளாகும். இரு விக்கட் தொகுதிகளுக்குமிடையேயான தூரம் 20M ஆகும். ஒரு விக்கட் தொகுதியிலிருந்து மறு விக்கட் தொகுதி வரை ஓடித்தொட்டால் ஒரு ஓட்டம் (ஒரு ரண்) கிடைக்கும்.




1) வீசப்பட்ட பந்து ஒரே விசையுடன் அடிக்கப்படும்போது துடுப்பிலுள்ள எப்புள்ளியில் பட்டால் அதிக தூரம் பந்து செல்லும்?
2) ஆட்டக்காரன் 2 ஓட்டங்கள் எடுத்தால் அவன் ஓடிய தூரம், இடப்பெயர்ச்சி ஆகியவற்றைத் தருக.
3) அடிக்கப்பட்ட பந்து மேலே சென்று கீழே விழுமாயின் அதன் இயக்கத்தைக் காட்டுவதற்கான வேக - நேர வரைபைத் தருக.
4) ஆட்டவீரன் 20N விசையுடன் பந்தை அடித்தால் ஆற்றப்படும் வேலை 800J எனின், பந்து சென்ற தூரம் யாது?

B. 1மீற்றர் நீளமான இலேசான கோலொன்றின் இரு முனைவுகளிலும் 350N, 150N ஆகிய இரு நிலைகள் வைக்கப்பட்டு கோல் கிடையாக சமனிலையடைவதற்கு முனையொன்றை 350N விசையிலிருந்து எவ்வளவு தூரத்தில் வைக்கப்படுதல் வேண்டும் என்பதைக் காண்க.

வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் நம்பமுடியாத கட்டணக்கழிவில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma In Management (Pre.MBA)
காலம் 9 மாதங்கள் (MBA final year in UK / London)
To Whom :பட்டதாரிகள், வர்த்தக வியாபார பட்டதாரி அல்லாதவர்கள், உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA முடித்தவர்கள்)

HND In Business Management - Edexcel
HND In Computing - Edexcel
HND In Quantity Surveying - Edexcel
காலம் 16 மாதங்கள்
(Bsc final year in UK / London)
Admission Requirements : 2 passes in G.C.E. (A/L) in any subject and 6 passes inclusive of two credit passes for English and Mathematics in G.C.E (O/L) examination or Success full completion of BCHS Access programming.

Diploma In Hospitality Management (Hotel Management)
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்களுக்குஅடுத்த இரண்டு வருட பட்டப்படிப்பு லண்டனில்
காலம் 6 மாதங்கள்

அனைத்துப் பாடநெறிகளுக்குமான புதியபிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன
Batch 4 07.10.2009 Batch 5 10.10.2009 Batch 6 18.10.2009

எமது நிறுவனத்தின் அனைத்துக் கற்கைநெறிகளுக்கும் சர்வதேச தரம் கொண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Access Programming (Foundation Degree Programme)
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L வில் நல்ல பெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma போன்ற கற்கை நெறிகளைக் கற்று. பட்டதாரி ஆகுவதற்கான முன்னோடிப் பாடநெறி

Diploma In English
Advanced Diploma In English
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை இலகுவாக தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த எமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் வழங்கப்படும்

BCHS
No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
HotLines: 0773501499 / 0777222422 / 0714299935
021 2224550
E-mail: info@bchs.lk


# போலி நாணயத் தாள்களுக்கு கடுமையான தண்டனைகள்

போலி நாணயத் தாள்களுக்காக ஆளொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து குற்றவியல் கோவையின் கீழ் தண்டிக்கப்படுவார்.

## குற்றங்களின் தன்மை

அ. போலி நாணயத் தாள்களைத் தயாரிப்பது அல்லது போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கும் ஏதாவது நடவடிக்கையில் ஈடுபடுதல்

ஆ. உண்மையான தாள்களைப் போன்று போலி நாணயத் தாள்களை வாங்குதல், விற்றல் அல்லது பரிமாற்றம் செய்தல்

இ. உண்மையான தாள் போன்று பாவிப்பதற்காக போலி நாணயத் தாள்களை ஒருவர் தன்னுடமையில் வைத்திருத்தல்

ஈ. போலி நாணயத் தாள்களை தயாரிப்பதற்கான ஏதாவது பொறிகள், மூலப் பொருட்கள் அல்லது வேறு ஏதாவது விடயங்களை வழங்குதல், கொள்வனவு செய்தல், விற்றல் அல்லது அகற்றுதல் அல்லது அத்தகைய பொருட்களை ஒருவர் தன்னுடமையில் வைத்திருத்தல்

## தண்டனைகள்

குற்றவியல் கோவையின் பிரிவு இலக்கம் 478அ, 478ஆ, 478இ மற்றும் 478ஈ என்பனவற்றின்படி சிறைத்தண்டனை (இது 20 ஆண்டுகள் வரை நீடிக்கப்படத்தக்கது) அபராதம் அல்லது சிறை, அபராதம் இரண்டினையும் கொண்டது.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | தொலைபேசி: 011-2477355 |
| நாணயத் திணைக்களம் | 011-2477014 |
| இலங்கை மத்திய வங்கி | தொலைநகல்: 011-2477726 |
| இல. 30, சனாதிபதி மாவத்தை | மின்னஞ்சல்: currency@cbsl.lk |
| கொழும்பு 1 | |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 ★ 08 ★ 1935



உதிர்வு 07 ★ 10 ★ 1998

## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)

ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
ஆறாது எம் துயர்
நிலையற்ற இவ்வுலகில் எமக்கு
நீங்கள் நிலையான செல்வம் அப்பா
பலகோடி செல்வங்கள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்களின் அன்பிற்கு ஈடாகுமா?
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திருக்கும் உங்களின் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

நுணாவில், சாவகச்சேரி. (89577) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (லண்டன்).

## நல்லூர் கூ.சங்கத்துக்கும் பொது முகாமையாளராக பணியாற்றுவார்

யாழ்ப்பாணம், ஒக்.7

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸ் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் தற்காலிக பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவரை இரண்டு சங்கங்களுக்கும் பொது முகாமையாளராகப் பணியாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-224)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 . 04 . 1928



ஆண்டவன் அடியில் 18 . 10 . 2008

## அமரர் தெய்வானைப்பிள்ளை தங்கராசா

திதி: தேய்பிறை சதுர்த்தி

உயர்வாக நாம் வாழ உயிர்நாடியாக நின்று
உழைத்திட்ட எம் தாயே
எமையெல்லாம் தவிக்கவிட்டு நீர் சென்று
ஓராண்டு ஆகியதோ!
எம் நெஞ்சிருக்கும் வரை அம்மா உங்கள் முகம்
அதில் பதிந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: திரு.திருமதி இரவீந்திரன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (89568) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## செங்குந்த இந்துக்கல்லூரியின் பவளவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.7

செங்குந்த இந்துக்கல்லூரியின் பவள விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆர்.பாலகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வைத்திய கலாநிதி கெ. ஜெயரட்ணமும் மற்றும் அவரது பாரியாரும் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியருமான திருமதி யோ. ஜெயரட்ணமும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன், யாழ்.மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் என்.ஆர்.எஸ்.சிவரூபன், பலாலி ஆசிரியர்கலாசாலையின்வருகை விரிவுரையாளர் திருமதி அபிராமி சிவரூபனும், கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராஜாவும் கலந்து கொள்வர்.

(204- 236)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னன் சின்னத்துரை (பாடகர்)

திதி: 07.10.2009

அன்னை மடியில் 10★01★1927

ஆண்டவன் அடியில் 18★09★2008

அன்பிற்கும் பாசத்திற்கும் பண்பிற்கும்
உறைவிடமாய் விளங்கிய எங்கள் ஐயாவே!
ஆயிரம்தான் உறவுகள் இருந்தாலும்
ஐயா என்று சொல்ல உறவொன்றில்லை
நீங்கள் பெற்ற பிள்ளைகள் தவித்திங்கு
அழுகுதே ஐயா!

தாட்சாயினி வாசா, ஆனந்தா வீதி, மானிப்பாய். (89565) மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.


கூரியர் சேவை

* உலகின் சகல நாடுகளுக்குமான கடிதங்கள்.பொதிகள் மற்றும் ஆவணங்கள் 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
* அவசர கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் 48 மணி நேரத்தில் ஒப்படைக்கப்படும்.
* கனடா.லண்டன்.சுவிஸ்.பிரான்ஸ். அவுஸ்ரேலியா நாடுகளுக்கு 1 Kg கட்டணம் 550ரூபா மட்டுமே.
* நீங்கள் அனுப்பும் பொதிகளின் நிறைகளுக்கு ஏற்ப மாறுபடும் விசேட கட்டண சலுகைகள்.
* கனடா மற்றும் லண்டனுக்கு விசேட கட்டணச் சலுகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

17.10.2009 வரை பொதிகள் அனுப்பும் ஒவ்வொருவருக்கும் பெறுமதி மிக்க அன்பளிப்புக்கள் காத்திருக்கின்றன.

ARRUL GLOBAL EXPRESS

தீபாவளியை முன்னிட்டு வழங்கப்படும் சகல விசேட கட்டணச் சலுகைகளையும் அறிமுகிக்க இன்றே தயாராகுங்கள்.

ARRUL GLOBAL EXPRESS
இல.01,பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. - 021 222 6113

# எச்சரிக்கை




## இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரமின்றி ஆளெவரும்

- எந்த ஒரு நாணயத் தாளினையும் வெட்டுதல், துளையிடுதல் அல்லது அச்சிடுதல், முத்திரை பொறித்தல் அல்லது நாணயத் தாளின் மீது ஏதேனுமொன்றினை வரைதல் அல்லது நாணயத் தாளின் மீது ஏதாவது இலச்சினை அல்லது முத்திரைகளை ஒட்டுதல்.
- நாணயத் தாள்களின் மீது இயல்பான ஏதாவது பொருட்களை அல்லது விளம்பர வடிவிலான பொருட்களை ஒட்டுதல்.
- ஏதாவது நாணயத் தாள்களை மீளத் தயாரித்தல் அல்லது உரு மாதிரி செய்தல்

மேற்குறிப்பிடப்பட்டவற்றினை மேற்கொள்வது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 58ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரியதொரு குற்றமாகக் கருதப்படும்.

**தண்டனைகள்**

**சிறைத் தண்டனை, அபராதம் அல்லது சிறைத் தண்டனை மற்றும் அபராதம் இரண்டும்.**

ஏதாவது நாணயத் தாள்களை மீளத் தயாரித்தல் அல்லது போலிகளை உருவாக்குதல், ஏதாவது பிரச்சார நோக்கங்களுக்காக ஆளொருவரின் புகைப்படத்தினை, சுலோகங்களை அல்லது வடிவமைப்புக்களைப் பயன்படுத்துதல் (உ-ம்: அரசியல், சந்தைப்படுத்தல், வர்த்தகம், சமூகம், பொருளாதாரம்) என்பதனையும் குற்றமொன்றாகக் கருதப்படும்.

லமினேட்டிங் செய்தல், முத்திரை பொறித்தல், ஒட்டுதல் என்பன நாணயத் தாள்களை உருக்கெடுத்து விடும் என்பதனால் அவற்றைத் தவிர்க்கவும்.

**வேண்டுமென்றே உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை மீளமாற்றுவதனை இலங்கை மத்திய வங்கி நிராகரிக்கும்.**

### தேசிய செல்வத்தினை பாதுகாக்கும் விதத்தில் நாணயத் தாள்களை கவனமாகவும் சுத்தமாகவும் பாவியுங்கள்.

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொலைபேசி: 011-2477355
011-2477014
தொலைநகல்: 011-2477726
மின்னஞ்சல்: currency@cbsl.lk

## பசுமைப் புரட்சியொன்று படைத்திட வாரீர்!

பசுமையென்றும், புரட்சியென்றும்
பாடிப் பரவுவதிலும், பயனுள்ள
பசுந் தளிர்கள் நாட்டிப்
பரம்பரையை வாழ வைத்திடத்தான்
பசு மரங்கள் நாட்டிடுவோம்
நாட்டையும் வீட்டையுமுயர்த்தும்
மரக்கன்றுகளை ஒவ்வொருவரும்
மண் மீது நாட்டிடுவோம் - அவை தரும்
மலர் கொண்டு மனம் மகிழ
இறைவனுக்கு மாலை தொடுப்போம்
கனி வகைகள் தனை உண்டு
பயன் பெறுவோம்
பச்சைய இல்லமது வேண்டுமென்று
பல நாளாய் ஞானியரும்
விஞ்ஞானியரும் வேண்டி நிற்கையில்
இப்பூமி தன்னில்
நீயழித்த மரக் கூட்டம் தன்னால் - இன்று
மழையில்லையென்றும் உஷ்ணம்
உலகுயர்ந்ததென்றும் வெட்கமில்லாது
நீயுரைக்கும் வெறும் பேச்சால்
இச் சமூகம் பட்டிடும் துன்பமது போதும்!
இன்றே நாமொரு முடிவெடுப்போம்
இருக்கும் இடமெல்லாம் மரக்கன்று
நாம் நடுவோம்
இனி வரும் சமூகம் எமை ஏளனம்
செய்யாதிருக்க
இப்போதே கங்கணம் கட்டிடுவோம்
இனியும் நாம் கண்டபடி
மரம் வெட்ட மாட்டோமென்று!
மற்றவர்கள் மனம் பூரிப்படையவென
நாட்டுவோம் பெருமளவில்
மரங்களையே!
மண்ணையுழுது வளமாக்கியே
வாழ்வில் நாமும் முன்னேறுவோம்.

செல்வநாயகம் ரவிசாந்
குப்பிளான்.


Fixed Line

# தேர்வு செய்வதற்கான நேரம்

மிகக்குறைந்த கட்டணத்தைக்கொண்ட Dialog நிலையான இணைப்புகளுக்கு மாறுங்கள்

| Dialog நிலையான தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் | நீங்கள் இப்போது செலுத்திக்கொண்டிருக்கக்கூடிய தொகை |
|---|---|
| ஆரம்பக் கட்டணம் இல்லை | ஒவ்வொரு அழைப்பிற்கும் ரூ.1/50 அளவான கட்டணம் |
| வேறு வலையமைப்பிற்கான அழைப்புகள் ரூ.2/- | வேறு வலையமைப்புகளுக்கு ரூ.5/- அளவிலான கட்டணம் |
| மாதாந்தக் கட்டணம் ரூ.300/- | ரூ.900/- அளவான மாதாந்தக் கட்டணம் |

மற்றும் வேறு Dialog நிலையான தொலைபேசிக்கான அழைப்புகளில் 1800 நிமிடங்கள் இலவசம்

## மிகச்சிறந்த நிலையான இணைப்புக் கட்டணங்கள்

உங்கள் இல்லம் மற்றும் தொழிலகங்களுக்கானது

மேலதிக விபரங்களுக்கு (011) 7 133 133

Dialog

TRC/EC/ADT/DBB/09-1

Dsign


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உரிமைகளை மீட்குமா உலகத் தமிழ் மாநாடு?

ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. 2010- ஆம் ஆண்டு கோவையில் அந்த மாநாடு நடக்கவுள்ளது. அதற்கான தயாரிப்புப் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. இதற்கு முன் நடைபெற்றவை உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் என்றே அழைக்கப்பட்டன. தற்போது நடைபெற இருப்பதை உலகத் தமிழ் மாநாடு என்று தி.மு.க. அரசு அழைக்கிறது.

தமிழ்நாட்டில் இத்தகைய மாநாடு நடப்பது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னர் அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் முதல்வர்களாக இருந்த காலங்களில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. ஆனால், கலைஞரின் ஆட்சிக்காலத்தில் நடப்பது இதுவே முதல் தடவை!

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் அது விட்டுச் சென்ற அதிர்வுகளும் மறந்து விடக்கூடியவை அல்ல. சீருடையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட களேபரத்தில் ஒன்பது அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர்.

1966 ஆம் ஆண்டு முதன்முறையாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடை பெற்றது. அதற்குச் சென்றிருந்த அன்றைய தமிழக முதல்வர் பக்தவத்சலம், இரண்டாவது மாநாட்டை தமிழ் நாட்டில் நடத்தவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அது ஏற்கப்பட்டு, அதை சென்னையில் நடத்துவதென்று முடிவானது. ஆனால், பக்தவத்சலத்துக்கு கொடுத்துவைக்கவில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்ட அலையும், மாற்றத்தை விரும்பிய மக்களின் மனநிலையும் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்கு அடிகோலின. ஆட்சியை தி.மு.க. பிடித்தது. அண்ணா முதலமைச்சர் ஆனார். அரியணையில் தங்களை அமரவைத்த தமிழன்னைக்கு நன்றி செலுத்த விரும்பி



னார் அண்ணா. அதற்கு வசதியாக வந்து வாய்த்தது உலகத் தமிழராய்ச்சி மாநாடு. 1968 ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதியிலிருந்து பத்தாம் திகதி வரை உலகத் தமிழராய்ச்சி மாநாட்டை சென்னையில் சிறப்புற நடத்தியது அன்றைய தி.மு.க. அரசு.

மாநாட்டின்போது அண்ணாதான் முதல்வர் என்ற போதிலும், அமைச்சராக இருந்த கலைஞர்தான் மாநாடு வெற்றி பெற அதிகம் பாடுபட்டவர். அதை அன்றைய ஊடகங்கள் பதிவு செய்து பாராட்டின. அதன்பிறகு 1981-இல் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது மதுரையிலும்; 1995- இல் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது தஞ்சாவூரிலும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்பட்டது. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்பட வேண்டுமென்றால், தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச நிறுவனத்தோடு (ஐ.ஏ.டி.ஆர்.) கலந்து பேசித்தான் நடத்த முடியும். உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்கான அமைப்பு அது. தமிழகத்தில் மட்டுமல்ல... உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வேறு எங்கு நடந்தாலும் ஐ.ஏ.டி.ஆர். அமைப்போடு இணைந்துதான் அந்தந்த அரசாங்கங்கள் மாநாட்டை நடத்தும். அதுதான் நடைமுறை.

இந்த சர்வதேச நிறுவனம் 1964-ஆம் ஆண்டு டெல்லியில் உருவாக்கப்பட்டது. கீழ்த்திசை நாடுகள் குறித்த ஆராய்ச்சியாளர்களின் 26 ஆவது சர்வதேச மாநாடு 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டெல்லியில் நடைபெற்றது. அப்போது தான் இந்த ஐ.ஏ.டி.ஆர். அமைப்பை உருவாக்குவது என்று முடிவு செய்யப் பட்டது. உலக அளவில் தமிழ் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த 26 அறிஞர்கள் கூடி விவாதித்து இந்த அமைப்பை உருவாக்கினார்கள். கமில் ஸ்வலபல், தனிநாயகம் அடிகளார், ஏ.கே.ராமானுஜம், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் உள்ளிட்ட பலர் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கையெழுத்திட்டு, அந்த நிறுவனத்தை உருவாக்கினார்கள்.

இதுவரை நடைபெற்ற எட்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் இந்த ஐ. ஏ. டி.ஆர். அமைப்பின் பங்களிப்போடு தான் நடந்துள்ளன. அந்த அமைப்பின் தலைவராகப் புகழ்பெற்ற அறிஞர் நொபுரு கரஷிமா இருக்கின்றார். அவர் சோழர் காலம் குறித்த ஆய்வுகளில் மிக முக்கியமான பங்களிப்புகளைச் செய்தவர். கடந்த மாநாட்டின் போதும் அவரே தலைவராக இருந்தார்.

'உலகத் தமிழ் மாநாடு இந்த முறை மிகக்குறுகிய கால அவகாசத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் செயல்பட்டு வரும் தமிழறிஞர்கள் இந்த மாநாட்டுக்கென்று சிறப்பான கட்டுரைகளை தயாரிப்பதற்கு இந்தக்கால அவகாசம் போதுமானதாக இருக்காது என்று சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் , 'மூன்று மாத காலம் முழுதாக-இருக்கிறது. அறிஞர்கள் தமக்கொரு தலைப்பை எடுத்து ஒரு கட்டுரை எழுதுவதற்கு இது போதுமானதுதான்...' என்று வேறுசிலர் கருத்து தெரிவிக்கின்றனர். கடந்தமுறை தஞ்சையில் நடந்த மாநாட்டுக்கு சர்வதேச நாடுகளிலிருந்து வந்தவர்களுக்கு இப்போது அழைப்புக் கடிதங்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன என்று செய்திகள் வருகின்றன. கோவையில் மாநாட்டுக்கான இடம் பார்க்கும் பணியும் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

இப்போது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தப்போகும் தமிழக அரசு இதற்கு முன் நடத்தப்பட்ட மாநாடுகளின் சாதக-பாதகங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்ணா காலத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 தமிழறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். ஒன்பது தலைப்புகளில் அரங்குகள் அமைக்கப்பட்டு, அவற்றில் 36 குழுக்களாக அறிஞர்கள் பங்கேற்று, பல்வேறு விஷயங்கள் குறித்து ஆய்வுக் கட்டுரை களை சமர்ப்பித்து விவாதித்தனர்.

தமிழில் மட்டும் கட்டுரைவாசித்து விவாதிக்க மு.வரதராசனார் தலைமையில் அரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மற்ற அமர்வுகள் அனைத்திலும் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விவாதங்கள் நடந்தன. அறிஞர்கள் பங்கேற்ற இந்த ஆராய்ச்சி அரங்குகள் தவிர, பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சி அரங்குகளும் அமைக்கப்பட்டன. அன்றைய குடியரசுத் தலைவர் ஸாகீர் ஹுசேய்ன் அந்த மாநாட்டை தொடக்கி வைத்தார். சென்னை மெரீனா கடற்கரையில் நாம் இப்போது பார்க்கிற வள்ளுவர், கம்பர், ஔவை உள்ளிட்ட தமிழறிஞர்களின் சிலைகள் அந்த மாநாட்டின்போதுதான் நிறுவப்பட்டன. கண்ணகி சிலையும் அப்போது அமைக்கப்பட்டதுதான்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கூட்டப்பட்ட மாநாட்டில் சில வருந்தத்தக்க சம்பவங்கள் நடந்துவிட்டன. ஈழத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி, சுவீடன் நாட்டின் உப்பசாலா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராயிருந்த வேலுப்பிள்ளை, அதே நாட்டைச் சேர்ந்த அறிஞர் பீட்டர் ஷால்க், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சண்முகதாஸ் முதலானவர்களைப் பாதுகாப்புக் காரணம் சொல்லி மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்காமல் திருப்பி அனுப்பியது அன்றைய அரசு. அவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தப்பட்டார்கள். மாநாடு நடக்கும் நேரத்தில் தமிழறிஞர்கள் திருப்பி அனுப்பப்பட்டது அப்போது கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியது.

தற்போது நடத்தப்படவுள்ள உலகத் தமிழ் மாநாடு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், 1968- இல் அண்ணா காலத்தில் நடந்த மாநாட்டை முன் மாதிரியாக எடுத்துக்கொள்வதே பொருத்தமாயிருக்கும். மொழியைக் கொண்டாடுகிற அதே நேரத்தில், அறிவுத் துறை சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு உரிய முக்கியத்துவம் இந்த மாநாட்டில் வழங்கப்பட வேண்டும். அயல் நாட்டுத் தமிழறிஞர்கள் எவ்விதத் தடையுமின்றி இங்குவந்து மாநாட்டில் பங்கேற்பதற்குக் கூடுதல் கவனம் செலுத்தப் படவேண்டும்.

இன்று தமிழினம் மிக மோசமான நிலையில் உள்ளது. இலங்கையில் நடந்துள்ள கோரப் படுகொலைகளும், அங்கே சுமார் மூன்று லட்சம் தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்படுவதும் உலகமெங்கும் வாழுகின்ற தமிழர்களை மிகவும் பாதித்திருக்கிறது. தோற்றுப் போன மனநிலையில் துவண்டு போய்க் கிடக்கிறார்கள் தமிழர்கள். அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டப்போவது யார்? தமிழினத்தின் நிலை அங்கே அப்படியென்றால், தமிழகத்தின் உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. அண்டை மாநிலங்கள் தமிழ்நாட்டின் நதிநீர் உரிமைகளை மறுத்துவருகின்றன. மத்திய அரசோ, மாநில உரிமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்துத் தன்னிடத்தில் குவித்து வைத்துக் கொள்கிற முனைப்பில் இறங்கியிருக்கிறது. இந்த அதிகாரத்துவப் போக்கை எதிர்க்கவும் முடியாமல், ஏற்கவும் முடியாமல் மாநிலங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழை மத்தியில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும், நீதிமன்ற அலுவல் மொழியாகவும் அறிவிக்கவேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை இந்த மாநாடு கூட்டப்படும் நேரத்திலாவது மத்திய அரசு ஏற்று நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் இப்போது பரவி வாழ்ந்தாலும், தற்போதுள்ள சூழலில் இலங்கையில் இப்படி ஒரு மாநாட்டை நடத்தலாம் என்று கற்பனைசெய்து பார்க்கவும் முடியவில்லை. இந்திய வம்சாவளியினரை பயங்கரவாதிகளாக சித்திரித்து சிறைக் கொட்டடியில்

**ரவிக்குமார்**

அடைத்துள்ள மலேசியாவும் அதற்கு அனுமதிப்பது சந்தேகம்தான். இப்படியான சூழலில், புலப்பெயர்வு என்பதன் பல்வேறு பரிமாணங்களை விவாதிப்பதற்கு இந்த மாநாட்டில் வாய்ப்பேற்படுத்தித் தருவது மிக அவசியமாகும்.

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் இருக்கும் தமிழ்த் துறைகள் சவலைப் பிள்ளைகளாகக் கிடக்கின்றன. அவற்றை மேம்படுத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மொழியியல், கல்வெட்டுயியல், மொழிபெயர்ப்பு என ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தைக் கவனம் செலுத்த வைத்தால் இன்னும் சில ஆண்டுகளில் நல்ல பலன் ஏற்படுவது உறுதி. இவை எல்லாம் கைகூட வேண்டுமானால், தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து தமிழ் மொழியின் சிறப்பு ஒன்றையே மனதில்கொண்டு செயல்பட முன்வர வேண்டும்.

'உரிமைக்குக் குரல் கொடுக்கவும், தங்கள் இனத்துக்கு பலம் சேர்க்கவும் தமிழர்கள் சுலபத்தில் ஒன்றுசேர மாட்டார்கள்...' என்ற பழியைத் துடைப்பதற்கு இது ஒரு அரிய வாய்ப்பு... பயன்படுத்திக்கொள்ளுமா தமிழினம்?

இதற்கிடையே கோவை உலகத் தமிழ் மாநாட்டிக்கு சில தமிழ் ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினர் மத்தியில் எதிர்ப்புக் குரல்களும் கேட்கத் தொடங்கி விட்டன. கலைஞர் உலகத்தமிழ் மாநாடு அறிவிப்பை வெளியிட்ட அதே நாளில், கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில், 'இலங்கைத் தமிழர்களின் துன்ப, துயரங்கள்' பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடந்தது. அதில் (சசிகலா) ம.நடராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், இந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத் போன்றோர் கலந்து கொண்டனர்.

அதில், ''கோவையில் திடீரென உலகத் தமிழ் மாநாடு நடத்துவதாக அரசு அறிவித்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது. ஆயிரக் கணக்கான தமிழர்கள் ஈவு இரக்கமின்றிக் கொல்லப்பட்ட இலங்கையில் இந்த மாநாட்டை



நடத்த வேண்டியது தானே? அல்லது தமிழன் படாதபாடுபடும் மலேசியாவில் நடத்த வேண்டியது தானே? அதை விட்டு விட்டு கோவையில் ஏன் நடத்த வேண்டும்? உலகத் தமிழன் எக்கேடு கெட்டால் என்ன? தானும், தன் குடும்பமும் பதவி சுகத்துடன் நலமாக இருக்க வேண்டும் என்றுதான் முதல்வர் நினைக்கிறார்'' என்று பகிரங்கமாகப் பேசி கைதட்டல்களை அள்ளிக் கட்டிக் கொண்டார் அர்ஜுன் சம்பத்.

அடுத்தநாள் இதே ஆவேசத்தை அ.தி.மு.க. விழா ஒன்றிலும் கேட்க முடிந்தது. அதே ஆர்.எஸ்.புரம் பகுதியில் நடந்த அ.தி.மு.க.வின் அண்ணா நூற்றாண்டு விழா பொதுக் கூட்டத்தில் பேசிய உள்ளூர்த் தலைவர்கள்,''கோவை, அ.தி.மு.க. வின் கோட்டையாக விளங்குகிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு பல தொகுதிகளில் தோல்வியை வாரித் தந்து அந்தக் கட்சிக்கு 'சிறுபான்மை அரசு' எனும் பட்டத்தைச் சூடியதே கோவை மண்தான்.

கடந்த மக்களவைத் தேர்தலிலும் இங்குள்ள கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு தொகுதிகளில் தி.மு. க. தோற்றது. அதை நேர் செய்யவே இவ்வளவு அவசரமாக கோவையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தப் போவதாக கருணாநிதி அறிவித்திருக்கிறார். கோவையில் இந்த மாநாட்டை நடத்தி அரசுப் பணத்தில் நகரை ஜொலிக்க வைத்து மக்களைத் திசை திருப்பி அடுத்த சட்டமன்றத் தேர்தலில் அவர் வாக்கு வாங்கப் பார்க்கிறார். இதற்கு மசிபவர்களா கோவை மக்கள்? அது மட்டும் இங்கே நடக்கவே நடக்காது!'' என்று கோபத்தைக் கொப்பளித்தனர். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அகதி முகாம்களிலிருந்து 22 ஆயிரத்து 668 பேர் விடுவிப்பு

## அமைச்சர் சமரசிங்க தகவல்

கொழும்பு, ஒக். 07

வவுனியா அகதி முகாம்களில் இருந்து இதுவரை 22 ஆயிரத்து 668 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் கூறினார்.

இதேவேளை, தற்போதுவரை ஆயிரத்து 211 குழந்தைகள் முகாம்களில் பிறந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில உள்ள மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது. இதுவரை 22 ஆயிரத்து 668 பேர் அங்கு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுள் 10 ஆயிரத்து 593 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். 12 ஆயிரத்து 75 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 19 ஆயிரத்து 625 பேர் உறவினர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேபோல் ஆயிரத்து 211 குழந்தைகள் புதிதாகப் பிறந்துள்ளன.

அகதி முகாம்களில் குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் உட்பட அனைத்தையும் நாம் முழுமையாக வழங்கியுள்ளோம். உணவுப் பொருள்களும் சரியாக வழங்கப்படுகின்றன. மீள்குடியேற்றமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது வவுனியா அகதி முகாம்களில் இரண்டு லட்சத்து 38 ஆயிரம் பேர் உள்ளனர். வன்னியில் கண்ணிவெடிகள் அகற்றி முடிக்கப்பட்டதும் அவர்கள் மீள் குடியமர்த்தப்படுவர். - என்றார். (அ-சி)

# இளைஞர்களுக்கான கருத்தரங்கு

வடமராட்சி, ஒக் 7

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் உலக சேவை தின நிகழ்வாக இளைஞர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ''இளைஞர் தலைமைத்துவம்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஜயா கலாமணி ''இளைஞர் நேர முகாமைத்துவம்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆறுமுகம் சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (201-236)

# சந்திரிகாவின் புதல்வர் விமுக்தி அரசியலுக்கு வரமாட்டாராம்

## மங்கள சமரவீர எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஒக். 07

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க அரசியலில் ஈடுபடமாட் டார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவோ அல்லது அவரது புதல்வரோ செயற்பாட்டு அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்பதனைத் திட்டவட்டமாகத் தம்மால் அறிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான விரிவான எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின் ஊடாக சந்திரிகாவையும், அவரது புதல்வரையும் களமிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# ஐ.நா. பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்தில் இம்மாதம் இலங்கை விவகாரம் இல்லை

## பேரவையின் தலைவர் லீ லொங் மின் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 07

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் இம்மாதக் கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாத நிகழ்ச்சி நிரலில் இலங்கையின் விவகாரம் உள்ளடக்கப்படவில்லை என பாதுகாப்புப் பேரவையின் தலைவர் லீ லொங் மின் தெரிவித்துள்ளார்.

இலங்கை, மியன்மார் மற்றும் ஹொண்டுராஸ் ஆகிய நாடுகளின் விவகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென உறுப்பு நாடுகள் கோரிக்கை விடுக்கவில்லையா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை நிகழ்ச்சி நிரல் குறித்து ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் . நடவடிக்கையின் போதே ஊடகவியலாளர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. (அ-சி)

# பெண்கள் அமைப்புகளுக்கு இடையிலான கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக் 7

தென்மராட்சிப் பிரதேச பெண்கள் விவகார அதிகார சபையினர் பிரதேச பெண்கள் விவகார அமைப்புகளிடையிலான கண்காட்சியினை விரைவில் நடத்தவுள்ளனர்.

கண்காட்சியில் பொருள்களை காட்சிப் படுத்தவுள்ள பெண்கள் விவகார அமைப்புகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அதிகாரசபைச் செயலாளர் திருமதி ம. கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (50-207)

# மக்கள் வாழ்க்கைக்கு உசிதமான நாடு நோர்வே; ஐக்கிய நாடுகளின் ஆண்டறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 07

மக்கள் வாழ்கைக்கு மிகவும் உசிதமான நாடு நோர்வே என ஐக்கிய நாடுகளின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு குடிமக்கள் அனுபவித்து வரும் வசதிகளுக்கு ஏற்ப 182 நாடுகள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் வாழ்வதற்கு மிகவும் சிறந்த நாடாக நோர்வேயும், மிகவும் மோசமான நாடாக நைஜீரியாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயுட் காலம், கல்வியறிவு, பாடசாலை வசதிகள், நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

வாழ்வதற்கு மிகவும் உசிதமான நாடுகளின் பட்டியலில் நோர்வே முதலாம் இடத்தையும், ஆஸ்திரேலியா இரண்டாம் இடத்தையும், ஐஸ்லாந்து மூன்றாம் இடத்தையும் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாழ்வதற்கு மிகவும் உசிதமான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 13ஆவது இடத்தையும், பிரிட்டன் 21ஆவது இடத்தையும் வகிக்கின்றன.

மேலும், மிகவும் மோசமான நாடுகளின் வரிசையில் நைஜீரியா முதலாம் இடத்தையும், ஆப்கானிஸ்தான் இரண்டாம் இடத்தையும், சியரே லியோன மூன்றாம் இடத்தையும் வகிக்கின்றன.

இதேவேளை, இந்த ஆய்விற்காக பயன்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக உலகப் பொருளாதார நெருக்கடியின் பாதகமான அதிர்வுகள் உலகின் பல நாடுகளை தாக்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை அவசியமில்லை

## அமைச்சர் முரளிதரன் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 07

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை மக்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை - என தேச நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அகதி முகாம்களில் சுமார் 2 இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலைமைகள் சுமுகமான சூழ்நிலையில் காணப்படுகின்றன என்றும், இதனால் இந்திய மத்திய அரசு இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள மக்களை இலங்கைக்கு மீள அழைத்துக் கொள்ள இதுவே சிறந்த தருணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்படத்தக்கது. (அ-சி)

# எதிர்க்கட்சிகளின் கூட்டணி பற்றி மு.கா. இந்த வாரம் முடிவெடுக்கும்

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்ப்பது தொடர்பில் அமைக்கப்பட இருக்கும் கூட்டணியுடன் இணைகின்றமை தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் இந்த வாரம் இறுதி முடிவு எடுக்கவுள்ளது. இவ்விடயத்தை ஆராய்ந்து இறுதி முடிவு எடுப்பதற்காக மு.காவின் அரசியற்பீடம் எதிர்வரும் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடவுள்ளது. எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இக்கூட்டத்தில் திட்டவட்ட முடிவு எடுக்கப்படும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸன் அலி உதயனுக்கு கூறினார்.




யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பாடசாலை அதிபர் என்.இராமலிங்கத்துக்கு மாணவர் ஒருவர் மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்துவதையும், மாணவி ஆசிரியை ஒருவருக்கு மாலை அணிவிப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன்.பி.கே.பாலசங்கர் ஆசியர்தினத்தையொட்டி வெற்றியீட்டிய ஆசிரியை ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் ஆசிரியைகளின் வில்லுப்பாட்டு நிகழ்வையும், மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். [படங்கள்:லக்ஸ்மன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது

06.10.2009 செவ்வாய்க்கிழமை இருபாலைச் சந்தியில் பெண்களுக்கான கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்தினைக் காட்டி பெற்றுக் கொள்ளவும். தொடர்பு : 0776602518, 0779006048.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2010

2009ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அனுமதிக்காக 30.10.2009இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

குறிப்பு: தேவையானோர்க்கு விடுதி வசதி உண்டு.

(561547)

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல:- J/ 1591 06.03.1972

## பதவி வெற்றிடம்

1) பதவி:- களஞ்சிய முகாமையாளர்
2) சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 208 / 14
3) சம்பள அளவுத்திட்டம் -9700 - 80 x 10 - 85 x 10 -11350 (சங்கம் வழங்கும் இதர படிகளும்)
4) தகைமைகள்:-

அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் க.பொ.த (சாதாரண தரம்) 02 அமர்வுகளிற்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தகஎண்கணிதம் / தூயகணிதம், சிங்களம் / தமிழ்என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங் களிலான சித்தி.

5) வயது:- 18- 45

* சங்கம் கோரும் பிணையை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
* சங்க எல்லைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் போட்டோப் பிரதி இணைத்தல் வேண்டும்.
* விண்ணப்பப் படிவங்கள் யாவும் பொது முகாமையாளர், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 20.10.2009ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''களஞ்சிய முகாமையாளர் 208/14 பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும்.
* பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதியில்லாத விண்ணப்பம் என்பன நிராகரிக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி, மல்லாகம். பொது முகாமையாளர்

(சி/561543)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பூபாலசிங்கம்



இணுவில் கிழக்கு, குமாரலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பூபாலசிங்கம் (03.10.2009) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - இராசம்மாவின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் அமரர்களான விசுவலிங்கம்- மீனாட்சி தம்பதியரின் மருமகனும் அரியரத்தினம் (அமரர்), பரராஜசிங்கம் (அமரர்), தனபாலசிங்கம், யோகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிதம்பரநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் மயில்வாகனம் (இலங்கை மின்சாரசபை), செல்லம்மா, சிவயோகம், கமலவேணி, புவனேஸ்வரி, பொன்னம்மா, கனகசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விசாலாட்சி (அமரர்), செல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ரேவதி சந்திரா (ஜேர்மனி), கிருஸ்ணபாமா, யோகராணி, உமாபதி, செந்தில் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் தந்தையாரும் மகாலிங்கம் (ஜேர்மனி), சண்முகராசா, பாலச்சந்திரன் (வர்த்தகர்), டயானா (லண்டன்) ஆகியோரின் மாமனும் பிரியா (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி), விசாகினி, கஜேந்திரன் (பி ரான்ஸ்), மயூரதன், மகிந்தன், கஜனி, ரவீந்திரன், ராஜி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (89606)

தகவல்:
செந்தில் (மகன்).

## சிறுவர்,முதியோர் தின விழாவும் கட்டடத் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.7

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர் மாற்று வலுவுடையோர் தின விழா சமூக பராமரிப்பு சிறுவர் பாதுகாப்பு நிலைய கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதிரூபினி வரதலிங்கம், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட இணைப்பாளர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆகியோர் கலந்துகொள்வர்.

(201-325)

## ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நேற்றுக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

சர்வதேச முதியோர் வாரத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஆசிரியர் தினமான நேற்று மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

மூத்த பிரஜைகள் பேரவையின் தலைவர் எஸ்.சிவகுமாரனின் ஏற்பாட்டில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.கேசவராஜா, மூத்த பிரஜைகள் பேரவை அங்கத்தவர் கீத பொன்கலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களான செல்வி இராஜேஸ்வரி சுப்பையாப்பிள்ளை, திருமதி பி.திருச்செல்வம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(50- 100- 288)

## அரியாலை கிழக்கு, தென்கிழக்குப் பகுதி மக்கள் கவனத்துக்கு

நல்லூர்,ஒக்.7

மீள்குடியமர்த்தப்படவுள்ள அரியாலை கிழக்கு, தென்கிழக்குப்பகுதி மக்கள் அது தொடர்பாக தமது பிரிவுக் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்களது சொந்தக் காணிகளைப் பார்வையிட்டுத் தமது தேவைகள் குறித்த விவரங்களை கிராம அலுவலர்களிடம் தெரிவிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உதயபுரம் மக்கள் பயன்படுத்தக் கூடிய பாதைகள் குறித்து இராணுவம் முடிவு செய்யும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளின் மீள்குடியமர்வு குறித்து இராணுவம் மக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் என 512ஆவது படை அதிகாரி மேஜர் மடுகல்ல தெரிவித்தார்.

(50- 111)

## வவுனியாவிலிருந்து யாழ்.வந்த அகதிகளின் பொதி ஒன்று பருத்தித்துறை டிப்போவில்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வவுனியா இராமநாதன் நலன்புரி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களை ஏற்றிக் கொண்டு யாழ்.வந்த இ.போ.ச. பஸ் ஒன்றில் இருந்து பல பெறு மதிமிக்க ஆவணங்கள் அடங்கிய பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை இ.போ.ச.சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை சாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அந்தப் பொதியைத் தவறவிட்டவர்கள் அடையாளம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பல பெறுமதியான ஆவணங்கள் அதில் அடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(50)


## உதவியாளர் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு ஆண்/பெண் உதவியாளர் உடன் தேவை.

தொடர்பு :- எஸ்.சிவகுமார்
T.P- 0777554528

(சி/61553)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 37 வயது, பரணி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றம் இல்லாத, மூன்று சுற்று கிரகபாவம் 17, அரச தொழில் புரியும் பெண் ... செய்யும் மணமகனை எதிர்பார்க்கிறார்கள்.

விளம்பர இல. 3947, மே/பா உதயன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்
திருமதி சுகந்தினி அன்ரனி தவச்செல்வம்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்
அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் இணைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியியற் கல்லூரிச் சமூகம்,
கோப்பாய்.

(89605)


## STUDY IN EUROPE
## MBBS/MD

**Lugansk State Medical University**
Ukraine (உக்கிரேன்) - East Europe

ஸ்ரீ லங்கா Medical Councilயினால் அங்கீகரிக்கப்பட்டது

With O/Ls 7 Years
With A/Ls 6 Years

இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.

எமது நிறுவனத்தின் மூலம். அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.

**Next Batch Starting : 15th October**

**www.lugmedi.com**

| Colombo Head Office<br>Tel : (தமிழல்) 0777-767 818<br>Scholars Information Center ( 2nd Floor)<br>No.50 Galle Raod,<br>Colombo 06 | யாழ்ப்பாணத்தில் விபரங்களை பெற:<br>Mr.S.Mariaratnam 077-4528818<br>148, Temple Road, (Opp.UNICEF)<br>Jaffna. Tel : 021 - 222 3818 |
|---|---|


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் தாய் மடியில்
11 * 09 * 1934



விண்ணில் அரனடியில்
29 * 09 * 1999

### அமரர் உயர்திரு. வேலாயுதர் கந்தையா
(ஓய்வு பெற்ற/ கணக்காய்வு அத்தியட்சகர்)

திதி: புரட்டாதி பஞ்சமி

ஆண்டுகள் பத்தினை எட்டிடினும்
ஈண்டு என்நெஞ்சம் சோகத்தில்
மாண்டு விட்ட உங்கள் நினைவுடனே
மாண்புறு உருவைத் தேடுகின்றேன்
மீண்டும் பிறந்திடன் என்னிடம் வருவீர்

பிள்ளையார் வீதி, வியூ,
அளவெட்டி. 0213219572

அன்பு மனைவி.

(89603)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணக வாழ்வில்
18 * 08 * 1962



விண்ணக வாழ்வில்
12 * 10 * 2003

### அமரர் அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)

திதி: திருதியை

உத்தம சீலராய் ஊர் போற்ற வாழ்ந்தவரே!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே!
ஆயுள் வரை கூடவந்து
ஆதரிப்பீர் என்றிருந்தோம்-எம்மை
அந்தரத்தில் தனிக்க விட்டு சென்றதன் மாயமென்ன!
காலத்தால் நாமுனைப் பிரிந்து விட்டோம்
ஆறாண்டு சென்றாலும் ஆறாது நின்பிரிவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம் இறைவனை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

கணேஸ்வரம்
அளவெட்டி கிழக்கு. (சி/561362)

# முகாம்களிலுள்ள ஈழத் தமிழரை உடன் மீள்குடியமர்த்த முடியாது!

## அமைச்சர் கிருஷ்ணா விளக்கம்

பெங்களூர், ஒக். 07

இலங்கை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இரண்டரை லட்சம் தமிழர்களை, அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக குடியேறச் செய்ய முடியாது - என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறினார்.

இதுகுறித்து பெங்களூரில் நேற்றுமுன் தினம் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை அகதிகளுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி கோரியுள்ளார். இலங்கைத் தமிழர்கள் இரண்டரை லட்சம் பேர், அங்குள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மறுவாழ்வு வழங்கும்படி இலங்கை அரசை வலியுறுத்தி உள்ளோம். இலங்கையும் இதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், இதை உடனடியாக செயற்படுத்த முடியாது.

இலங்கைத் தமிழர் பகுதிகளில் பருவ மழை பெய்து வருகிறது. மேலும், கண்ணி வெடிகளை அகற்றும் பணியும் நடைபெறுகிறது. இந்தப் பகுதிகளில் மக்கள் மீண்டும் குடியேறலாம் என்று திருப்தி தெரிவிக்கப்பட்ட பின்னரே மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் தான் அங்குள்ள நிலைவரம் பற்றி கூறினேன்.

வட கர்நாடகாவில் மழை வெள்ளத்தால் பெரும் உயிர் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிதண்ணீர், குடியிருப்பு போன்ற நிவாரணங்களை மத்திய அரசு செய்ய வேண்டும். இதுகுறித்து பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். மத்திய அரசு பாராபட்சமாக செயற்படுகிறது என முதல்வர் எடியூரப்பா கூறியமை தேவையற்றது.

ஆஸ்திரேலியாவில் இனவெறியால் மட்டும் இந்தியர்கள் தாக்கப்படவில்லை. அதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்கள் உள்ளன. நான் ஆஸ்திரேலியா சென்று திரும்பிய பின்னர் இந்தியர்கள் மீதான இன வெறித் தாக்குதல் குறைந்துள்ளது - என்றார்.

# கடலாகச் சீறுகின்றது கிருஷ்ணா நதி; விஜயவாடா நகரம் மூழ்கும் அபாயம்!

விஜயவாடா, ஒக். 07

கடந்த 106 ஆண்டுகளில் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளப் பெருக்கால் ஆந்திராவில் கிருஷ்ணா நதி கடல்போல் காட்சி அளிக்கிறது. இதனால், விஜயவாடா நகரம் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ஆந்திரா, கர்நாடகாவில் தென் மேற்கு பருவமழை கொட்டித் தீர்க்கிறது. நதிகளில் வெள்ளப் பெருக்கெடுத்து எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. ஆந்திராவில் கிருஷ்ணா நதி கடலாக மாறியது போல் சீறிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. அதன் கரைகள் எல்லாம் மூழ்கி விட்டன. ஆற்றில் 10லட்சத்து 61 ஆயிரம் கன அடி வெள்ளம் பாய்கிறது. அவை அப்படியே பிரகாசம் அணைக்குச் செல்கிறது. கிருஷ்ணா ஆற்றில் 1903ஆம் ஆண்டு 10 லட்சத்து 30 ஆயிரம் கன அடி வெள்ளம் ஓடியதே இதுவரை அதிகப்பட்ச வெள்ளமாக இருந்து வந்தது.

106 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது அதை விட அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், விஜயவாடா நகரம் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்குக் காரணமாக வரலாறு காணாத அழிவு ஆந்திரா மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. பலர் வசிப்பிடங்களை இழந்து நிர்க்கதியாகி விட்டனர். இதனால் ஆந்திர வெள்ளப்பெருக்கை தேசிய அழிவாக பிரகடனப்படுத்த வேண்டும் என மத்திய அரசை ஆந்திர அரசியல் கட்சிகள் கோரியுள்ளன.

# ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமைக் கோரிக்கை: தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும்

## ஜெயலலிதா தெரிவிப்பு



சென்னை, ஒக். 07

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற தன்னிச்சையான கோரிக்கை,இலங்கை அரசின் 'சிங்களவர்கள் மட்டும்' மற்றும் 'தரப்படுத்தல்' கோட்பாடுகளுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

- இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நிரந்தரக் குடியுரிமை வழங்குவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது ? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தி.மு.க. சார்பில் அண்மையில் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு விழாவில், 1984 முதல் தமிழகத்துக்கு வந்துள்ள ஒரு லட்சத்துக்கும் மேலான இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியாவில் நிரந்தரக் குடியுரிமை வழங்குவது குறித்து மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்குவதாக அறிவிப்பதால் அவர்களுக்கு கூடுதலாக எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

'நிரந்தரக் குடியுரிமை' என்ற தகுதி காரணமாக அவர்களுடைய தற்போதைய நிலைமையில் ஏதாவது முன்னேற்றம் ஏற்படுமா? 115 அகதிகள் முகாம்களில் இருந்து அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்களா?

தமிழ் நாட்டில் புதிதாக அவர்கள் வாழ்க்கையைத் தொடங்க நிதி உதவியோ அல்லது வெகுமதியோ அளிக்கப்படுமா?

கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு போன்ற சமூகஉதவிஎன்பவை அவர்களுக்கு அளிக்கப்படுமா?

உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டிற்கு வரம்பு விதித்திருக்கின்ற நிலையில், யாருடைய ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும்?

இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு நிரந்தரக் குடியுரிமைத் தகுதி என்ற முன்மாதிரி உருவாக்கப்பட்டால், பங்களாதேஷ், மியன்மர் மற்றும் திபெத் ஆகியவற்றில் இருந்து வந்துள்ள அகதிகள் கோரும் நிரந்தரக் குடியுரிமைத் தகுதி குறித்து இந்திய அரசு என்ன செய்யும்?மற்ற நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் எந்தவொரு இடம்பெயர்ந்த சமுதாயமும், தங்கள் சொந்த மண்ணில், மறுவாழ்வு அளிக்கப்படுவதையே விரும்பும். எனவே நிரந்தரக் குடியுரிமை'வழங்கவேண்டும் என்கின்ற தன்னிச்சையான கோரிக்கை தமிழர் களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது - என்றுள்ளது.


## உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களின் பெற்றோர், நலன்விரும்பிகளின் நன்றிகள்



எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடு சீர்குலைந்து போகாமல் தடுத்து நிறுத்தி நீதியின் காவலனாய் நம் மத்தியில் தோன்றி உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் அவர்கள்பால் மாணவர்கள் கொண்ட அபிமானத்தைப் புரிந்து கொண்டு நல்லதோர் தீர்ப்பை நல்கிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான மாண்புமிகு கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(89625)

பெற்றோர்கள்,
நலன்விரும்பிகள்.


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
19.10.1922





உதிர்வு
18.09.2008

### அமரர் சுப்பர் கனகசபை (செல்லையா)

(முன்னாள் வர்த்தகர், மட்டுவில்)

திதி: புரட்டாதிமாத அபரபக்ஷ சங்கடஹர சதுர்த்தி

தேனினும் இனிய தெள்ளமுதாய் - எமை
காத்து வந்த குலவிளக்கே
நிலையற்ற இவ்வுலகில் - ஐயா எமக்கு
நிறைவான செல்வம் நீங்கள்
ஐயா என்று அழைத்து
ஆண்டு ஒன்று சென்றுவிட்டதே
ஆறுமோ எம் நெஞ்சம்
காலங்கள் மாறிடலாம் - உமைப்பிரிந்த
சோகங்கள் ஆறாது

அன்பான கணவராய்
ஆசைத் தந்தையாய்
பண்பான மாமாவாய்
பாசமுள்ள பேரனாய்
பாரினிலே வாழ்ந்து விட்டு
பாதியிலே சென்று - உமக்கு
ஒரு வருடம் ஆனதே
மறக்குமோ எம் நெஞ்சம்
மாறுமோ உங்கள் நினைவு
சோகங்கள் தீராமல்
என்றும் உங்கள் அன்பில் நிலைத்திருந்து

*உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆலடி ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மணல் வீதி,*
*மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி*

(89653)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### உருத்திரன் இரத்தினபூபதி



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரன் இரத்தினபூபதி கடந்த (02.10.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி (ஆசிரியர், டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி) - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,பொன்னுச்சாமி உருத்திரனின் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், இலங்கை கடற்படை, திருகோணமலை) அன்பு மனைவியும், பிரதீபனின்(பிரபா) பாசமிகு தாயும், தனுஷாவின் அன்பு மாமியும், நாகேஸ்வரி, பாலகிருஷ்ணன், நீலாம்பாள், உதயகுமார், பத்மாவதி (வவி - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாநிதி (பிரான்ஸ்), வசந்தமலர், மனோகரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவியாகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
*0776173927*

(89612)

தகவல்:
பொ.உருத்திரன்
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையப் பரீட்சார்த்திகளுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.07

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, தோற்ற விரும்பும் நலன்புரி நிலையங்கள், நிவாரணக் கிராமங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(50-201)

### 8 ஆம் ஆண்டு நினைவு முதலாம் ஆண்டு நினைவு

அஞ்சலி அஞ்சலி





**ஆ.செல்லையா (ஐயா)**
மண்ணில் - 11.10.1922
விண்ணில் - 05.05.2001

**செ.மகேஸ்வரி (அம்மா)**
மண்ணில் - 11.01.1926
விண்ணில் - 18.10.2008

திதி.சதுர்த்தி 07.10.2009

எமது கண்கண்ட தெய்வமே
கருவிழிகள் உன்னை நோக்கவே
தந்தை பிரிந்து ஈர்நான்கு
ஆண்டுகள்செல்கையில்
தாயைப்பிரிந்து ஓராண்டு செல்கையில்,
துயரம் இன்னும் எம்மைவிட்டு
அகலவில்லையே!

இல. 53, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குழி.

(89608) **குடும்பத்தினர்**

### தவறிவிட்டது

கைதடி மேற்கு, கைதடி என்னும் முகவரியுடைய வடிவேலன் துஷிலன் என்பவருடைய தே.அ.அட்டை (871173400 V) விசேட அ.அட்டை, பல்கலைக்கழக அ.அட்டை என்பன உரும்பிராய்-கைதடி வீதியில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது பின்வரும் T.P.யுடன் தொடர்பு கொள்ளவும். T.P- 0776085858, 0777252094

## சர்வதேச முதியோர், மாற்று ஆற்றலுள்ளோர் தின நிகழ்வுகள்

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர், மாற்று ஆற்றலுள்ளோர் தின விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். விவசாயத்திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகுமார், அச்செழு பிரதேச 511 ஆவது படையணியின் பிரிகேட் கொமாண்டர்கேணல் டபிள்யூ. டி.சி.கே. கொஸ்தா ஆகியோர் கலந்து கொள்வர்.

(50-201)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

தமது ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த எமது கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

1. திரு.அ.அகிலதாஸ் (அதிபர்)
2. திரு.து.தர்மானந்தசிவம்
3. திரு.மு.வேலாயுதபிள்ளை
4. திருமதி தே.பேரின்பராஜா
5. செல்வி பு.கனகசபை
6. திரு.பே.இளமுருகன்
7. திருமதி ஞா.இராஜேந்திரகுமார்
8. திருமதி உ.புஸ்பராசா
9. திருமதி தே.பஞ்சாட்சரம்

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/561549)





| வயதெல்லை | காலம் | நேரம் |
|---|---|---|
| 15, 17, 19 | ஐப்பசி 10,11ஆம் திகதி | காலை 8.30 மணி |
| 10, 13 | ஐப்பசி 24,25ஆம் திகதி | காலை 8.30 மணி |
| 19 வயதிற்கு மேற்பட்டோர் | | |

இடம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

குறிப்பு:
★ அனுமதிக் கட்டணம் ரூபா 50 அறவிடப்படும்
★ வயதெல்லைகள் யாவும் 01.01.2010 இலிருந்து கணிக்கப்படும்
★ போட்டியாளர்கள் யாவரும் சதுரங்கப் பலகை கொண்டு வர வேண்டும்
★ ஒவ்வொரு பிரிவிலும் முதல் 10 இடங்களை பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
★ போட்டியாளர்கள் அனைவரும் பிறப்புச் சான்றிதழ் கொண்டு வருதல் வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தொ.பே: 0778460089

(சி/561545)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு விசேட சலுகைகளைப் பெற முந்துங்கள்

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

ஏ-9 பாதையூடாக போக்குவரத்துச் சேவை




- எதிர்வரும் 20 ஆம் திகதி வரை புடைவை வர்த்தகர்களின் பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணம்.
- குளிரூட்டிய பொருள்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டு 24 மணி நேரத்தில் உரிய இடத்தில் கையளிக்கப்படும்.
  (சொசேஜ் வகைகள், பழ வகைகள், ஐஸ்கிறீம் மற்றும் சொக்லேட் வகைகள், இறைச்சி வகைகள் - வாரத்தில் இரு தடவைகள் இச் சேவை நடைபெறும்)
- முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை.
- எவருமே எதிர்பார்த்திராத மிகக்குறைந்த கட்டணங்கள்.
- அரச, தனியார் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்ற ஒரே நிறுவனம்
- எமது நிறுவனத்திற்கு முகவர்கள் எவரும் இல்லை.
- பொருள்கள் ஒப்படைத்து 3 நாள்களில் கிடைக்கும்
- இரு தசாப்த காலமாக மிகச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனம்

★ தலைநகரிலும் யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு, புதிய லொறிகளுடன் செயற்படும்
நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கக் கூடிய நிறுவனம்
இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்**
201,B, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112433889, 0112435247, 0777674119

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்**
69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813, 021 222 4317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட நலன்புரி நிலைய மக்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து 591 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்

## அனைவரும் தீவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

நல்லூர்,ஒக் .7

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட 182 குடும்பங்களைச் சேர்ந்த 591 பேர் நேற்று 10 பஸ்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

காரைநகர், ஊர்காவற்துறை, வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களாவர். ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 73 குடும்பங்களைச் சேர்ந்த 233 பேரும், வேலணைப் பிரதேசத் தைச் சேர்ந்த 109 குடும்பங்களைச் சேர்ந்த 358 பேரும் நேற்று உடனடியாகச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வேலணைப் பிரதேச செயலகப்பிரிவைச் சேர்ந்த மக்களை பிரதேச செயலர் மு.நந்தகோபாலனும், காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்தவர்களை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜெயசீலனும் கடற்படை அதிகாரிகளும், உரிய இடங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். வேலணை மத்திய கல்லூரியிலும் காரைநகர் தோப்புக் காட்டு வீட்டுத் திட்டத்திலும் , இவர்கள் தங்கவைக்கப்பட்டு இன்று புத்ன்கிழமை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இவர்களுக்கான உணவு வசதிகளைக் கடற்படையினர் செய்திருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.15 மணிக்கு யாழ். செயலகத்தை 10 பஸ்களில் வந்தடைந்த மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் வரவேற்று, தீவுப் பகுதிக்கு அனுப்பி வைத்தனர். வவுனியாவில் இருந்து வருகை தந்த மக்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் எனவும் கடந்த காலத் துயரங்களை மறந்து மகிழ்ச்சியாக வாழுமாறும் மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண் டார். (50-111-250-224)

# இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 07

வேகக் கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி அஞ்சலக வீதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் ஜே. நரேந்திரன் (வயது19) என்னும் இளைஞரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (04-207)

# ஏ-9 ஊடாக பொருள்களைக் கொண்டு செல்ல142 பாரவூர்திகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ் குடாநாட்டில் இருந்து ஏ-9 தரைப்பாதை ஊடாகப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு யாழ்.குடாநாட்டிலுள்ள 142 பாரவூர்திகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பாரவூர்திகளைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தொழில்நுட்ப ரீதியிலான சான்றிதழ்களை யாழ். இராணுவ கட்டளைத்தளபதியிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# காக்கைதீவில் தீ விபத்து; குடிசை எரிந்து நாசமாகியது

யாழ்ப்பாணம், ஒக். 07

உணவு சமைத்துக் கொண்டிருந்த வேளை அடுப்பிலிருந்து நெருப்பு, கூரையில் தீப்பற்றிக் கொண்டதால் ஓலைக் குடிசை எரிந்து சாம்பலாகிய சம்பவம் காக்கை தீவு மாதிரிக் கிராமத்தில் நேற்று நடந்துள்ளது.

முத்துலிங்கம் இலங்கேஸ்வரன் என்பவரது ஓலைக் குடிசையே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

காற்று அதிகமாக வீசியதாலும் காக்கை தீவு கடற்கரை வெளியாகையாலும் நெருப்புப்பற்றிக்கொண்டதும் குடிசை விளாசி எரியத் தொடங்கியது. அயலவர் மற்றும் வீதியால் சென்றவர்கள் தீயை நீருற்றி அணைக்க முயற்சித்த போதும் வீடு எரிந்து முடியும்தறுவாயிலேயேதீஅணைக் கப்பட்டது.



இதனால் குடிசையினுள் இருந்த பெறுமதிமிக்க தொடுவலைகள் மற்றும் உடுபுடைவைகள், சமையல் பாத்திரங்கள் என்பன முழுமையாகவும், குடிசைக்கு அண்மையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகள் பகுதியளவிலும் எரிந்துள்ளன. (04-7)

# அமைச்சர்கள் இருக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2006ஆம் ஆண்டு ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் பங்குபற்றி, நாட்டைப் பிரிக்கும் வகையில் உரையாற்றியதன் மூலம் இவர்கள் குற்றம் ஒன்றைப் புரிந்திருக்கிறார்கள் என்று இந்த வழக்கில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக நான்கு எம்.பிக்கள் சார்பிலும் நேற்று நீதிமன்றத்தில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா அங்கு கூறியவை வருமாறு:-

இந்த வழக்கு ஆரம்பத்தில் அரசமைப்பின் 157 ஆவது பிரிவின் கீழ் இங்கு தாக்கல் செய்யப்பட்டதாக அரசுத் தரப்பில் பதியப்பட்டிருந்தது.

அரசமைப்பின் 157 ஆவது பிரிவின்படி இத்தகைய தவறு ஒன்றை நாட்டுக்குள்ளேயோ அல்லது நாட்டுக்கு வெளியேயோ புரிந்திருந்தால் அதற்காக வழக்குத் தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனால் அது, தனி நபருக்கு எதிரானதாயின் மேன்முறையீட்டு நீதிமன்றிலும், கட்சிகள், குழுக்கள், நிறுவனங்கள் போன்றவற்றுக்கு எதிரானதாயின் உயர்நீதிமன்றத்திலுமே தொடுக்கப்பட முடியும்.

ஆனால், இந்த வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசமைப்பின் 157 ஆவது பிரிவின் கீழ் இந்த வழக்கு இங்கு தாக்கல் செய்யப்படமுடியாதது என்ற பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பி வழக்கைத் தள்ளுபடி செய்யும்படி கோரினோம்.

### நாட்டுக்குள் புரியப்பட்ட குற்றங்களாக இருக்க வேண்டும்

அதையடுத்து, சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்ற பொலிஸார், இந்த வழக்கைத் தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆவது பிரிவின் கீழும் தாக்கல் செய்கின்றனர் எனப் பதிந்தனர். அந்தப் பிரிவின் கீழ் இத்தகைய விடயங்களை ஆராயும் அதிகாரம் இந்த நீதிமன்றுக்கு உள்ளது. ஆனால் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் சுமத்தப்படும் குற்றங்கள் அனைத்தும் நாட்டுக்குள் புரியப்பட்டவையாக இருக்கவேண்டும். அப்படி நாட்டுக்குள் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில் ஆராயும் நியாயாதிக்கமே தண்டனைச் சட்டக் கோவைக்கு உட்பட்டதாகும்.

ஆனால், இங்கு நான்கு எம்.பிக்களும் புரிந்ததாகக் கூறப்படும் தவறு - அல்லது அவர்கள் ஆற்றியவை என்று கூறப்படும் உரைகள் - நாட்டுக்கு வெளியே இடம்பெற்றவையாகும்.

எனவே, இந்த விவகாரத்தை இந்த நீதிமன்றம் விசாரிப்பதற்கு முகாந்திரமே இல்லை.

அரசமைப்பின் 157 ஆம் பிரிவின் கீழான குற்றமாயின் அதை இந்த நீதிமன்று விசாரிக்க முடியாது. புதிதாகப் பொலிஸார் சேர்த்த தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆவது பிரிவாயின், அதன் கீழ் வெளிநாட்டில் ஆற்றிய தவறு குறித்து விசாரிக்க முடியாது.

ஆகவே, இந்த நான்கு எம்.பிக்களுக்கும் எதிரான இந்த வழக்கு விசாரணையை முடிவுறுத்துமாறு உத்தரவிடும்படி நாம் கோருகின்றோம்.

இந்த நான்கு எம்.பிக்களும் - 2006 இல் சமாதான காலத்தில் - வெளிநாடுகளில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் ஆற்றிய உரைகள் தொடர்பில், சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்து 2008 டிசம்பர் 5 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் ஒரு முறைப்பாட்டை குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு வழங்கினாராம். அதனடிப்படையில் இந்தச் சட்ட விசாரணையும், வழக்கு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

சமாதான காலத்தில் வெளிநாட்டில் மட்டுமல்ல, இலங்கையிலும்பரவலாகப் 'பொங்கு தமிழ்' நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, நுவரெலியா, கொழும்பு எனப் பல இடங்களில் அந்நிகழ்வுகள் நடந்தேறின. அவற்றில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், கட்சிகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், அப்போதைய பிரதமரின் சார்பில் அவரின் பிரத்தியேகச் செயலாளர் ... எல்லாம் பங்குபற்றி உரை நிகழ்த்தினர். அப்படி உரை நிகழ்த்தியோர் இன்னும் அமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக, கட்சித் தலைவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை ஏதுமில்லை.

### வெளிநாட்டில் ஆற்றிய உரை குறித்த வழக்கு திட்டமிட்ட பாரபட்சம்

ஆனால், இந்த நான்கு எம்.பிக்களுக்கு எதிராக மட்டும் - அதுவும் அவர்கள் சமாதான காலத்தில் வெளிநாட்டில் ஆற்றிய உரைக்காக சுமார் இரண்டரை ஆண்டு காலம் கழித்து பொலிஸ் மா அதிபர் செய்த முறைப்பாட்டின் பேரில் - விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டுக்குள் நடந்த 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் உரையாற்றிய மூத்த அரசியல் பிரமுகர்களை விட்டு விட்டு, சமாதான காலத்தில் வெளிநாட்டில் ஆற்றிய உரைக்காக, யுத்த காலத்தில், இந்த எம்.பிக்களை மட்டும் தனித்துக் குறி வைப்பது, திட்டமிடப்பட்ட பாரபட்ச நடவடிக்கையன்றி வேறில்லை.

அதுவும் அரசமைப்பின் 157 ஆம் பிரிவின் கீழ் இந்த நீதிமன்றில் நடவடிக்கை எடுக்க முடியாது என நாம் சுட்டிக் காட்டியதும் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெற்று அவரின் வழிகாட்டுதலில் தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆவது பிரிவையும் சேர்க்கும் நடவடிக்கையைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மேற்கொண்டு ஒரு வருடமாயிற்று. அதன் பின்னர் இந்த ஒரு வருட காலத்தில் வழக்குத் தொடர்பில் ஓர் அறிக்கை கூடப் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட வில்லை. அவர்கள் வழக்கை இழுத்தடிக்கின்றார்கள்.

எமது கட்சிக்காரர்களான நான்கு எம்.பிக்களுக்கும் இந்த வழக்கை இப்படி இழுத்தடிக்காது முடிவுறுத்துவதே மிக மிக அவசியமான விடயமாகும். அவர்களில் சிலர் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்கள் நாட்டுக்குத் திரும்புவது அவசியம். தமது மக்கள் அவலங்களைச் சந்தித்துள்ள இந்த நேரத்தில் அவர்கள் தமது மக்களுக்கான பணிகளை மக்களுடன் சேர்ந்து ஆற்றுவதற்காக இங்கிருப்பது கட்டாயம். மேலும் நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் வரவிருப்பதால் அதற்காகவும் அவர்கள் விரைந்து நாடு திரும்புவது தேவையாகும்.

எனவே, இந்த வழக்கை இழுத்தடிக்காமல் உடனே முடிவுறுத்தி எம்.பிக்களின் சுயாதீன செயற்பாட்டுக்கு அனுமதி அளியுங்கள். - என்றார் சட்டத்தரணி தவராஜா.

அவரது வாதங்களைப் பதிவு செய்த நீதிமன்றம், இந்த வாதங்கள் தொடர்பில் அரசுத் தரப்பின் பதிலைத் தயார் செய்யும்படி உத்தரவிட்டு வழக்கை நவம்பர் 03 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (அ-சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்று 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

**செல்வன் கேதீஸ்வரன் யதுஷனன்**

அவர்கள் நயினை நாகபூஷணி அம்மன் அருள்பெற்று மேலும் கல்வியில் சிறந்து விளங்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(89622)

கரன் மாமா
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி ஜெயந்தி லிங்கேந்திரா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சண்முகம் விமலராணி**

அவர்களின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(561350)

ஆசிரியர் கழகம்,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.



## மரண அறிவித்தல்

**திருமதி கனகலிங்கம் மீனலோசனி**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனலோசனி நேற்று (06.10.2009) செவ்வாய்க்கிழமை கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் கே.கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற க.ஜனனி மற்றும் டகிஷயா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (07.10.2009) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக இருபாலை கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

86, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி

(89629)

தகவல்:
க.கனகலிங்கம் (கணவர்).
021 222 6730


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோதமாக ஆஸி. செல்வோரில் அநேகர் முன்னாள் புலி உறுப்பினர்களாம்

## இலங்கை அரசு விளக்கம்; அவுஸ்திரேலிய அமைச்சர் நிராகரிப்பு

கொழும்பு, ஒக்.7

தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் உட்பிரவேசித்து தமது செயற்பாடுகளை சர்வதேச மட்டத்தில் மீண்டும் ஆரம்பிக்கக்கூடும் என்று இலங்கை அரசு அச்சம் வெளியிட்டுள்ளது. இந்த விடயத்தில் அவுஸ்திரேலிய அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் இலங்கை அரசு கேட்டிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனக வல்கம்பாய, தமிழர்கள் விடயத்தில் அவுஸ்திரேலியா மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமென இலங்கை அரசின் சார்பில் அவுஸ்திரேலியாவைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் அவர்களின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அவுஸ்திரேலியாவுக்கு வருகின்றனர் என்றும், இந்தப் பேராபத்து தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் ஆஸ்திரேலியாவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்றும், இதனால் புலிகள் குறித்து அவுஸ்திரேலியா மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் கப்பல் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்களில் அனேகர் முன்னாள் புலி உறுப்பினர்கள் என்றும் அவ்வாறு சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்றபோது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் உடலில் யுத்தக் காயங்கள் இருக்கின்றமையைத் தாம் நேரில் அவதானித்துள்ளாரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் கடந்த 12 மாதங்களில் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வந்த இலங்கையர்களில் முன்னாள் புலி உறுப்பினர்கள் யாரும் கிடையாது என்றும் - இவ்வாறு வந்திருப்பவர்களின் உடல்களில் போர்க்காயங்கள் இல்லை என்றும் அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரண்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார். இவ்வாறு இலங்கையிலிருந்து வந்தவர்களால் அவுஸ்திரேலியாவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற இலங்கையின் கருத்தையும் அவர் நிராகரித்துள்ளார்.

# அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்து ஹெலஉறுமய கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஒக்.7

அமெரிக்கா மனித உரிமை மீறல்கள் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது என்று குற்றஞ்சாட்டி - அது தொடர்பில் கவனத்தை ஈர்ப்பதற்காக ஜாதிக ஹெல உறுமய நேற்று கொழும்பில் கையெழுத்து வேட்டை நடத்தியது.

இக்கையெழுத்து வேட்டை தற்போது இராணுவக் கண்காட்சி நடைபெறும் பண்டார நாயக்கா ஞாகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் நடைபெற்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் எம்பிக்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு அமெரிக்காவுக்கு எதிராகக் கையெழுத்திட்டனர்.

இதில் கலந்துகொண்ட இக்கட்சியின் சட்ட ஆலோசகரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான உதய கம்மன்பில்ல கூறியவை வருமாறு:-

உலகில் அமெரிக்காதான் அதிகளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றது. ஆனால் எம்போன்ற நாடுகள் மீது அந்நாடு பொய்யான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றது.

புலிகளை ஒழித்துக்கட்டும் எமது படையினரின் யுத்த நடவடிக்கை ஆரம்பமானதுமுதல் அமெரிக்கா எமது நாட்டின்மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை சுமத்தியவண்ணமே உள்ளது. புலிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றது.

எம் நாட்டில் புலிப்பயங்கரவாதம் ஒழித்துக் கட்டப்பட்டபோதிலும் அதை மீண்டும் இங்கு கொண்டுவர அமெரிக்கா முயற்சிக்கின்றது. இது பாரிய மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

இதைக் கண்டிக்கும் வகையிலும் இது தொடர்பில் அனைவரினதும் கவனத்தை ஈர்க்கும் வகையிலும்தான் இந்தக் கையெழுத்து வேட்டையை நடத்துகின்றோம்- என்றார். (அ-சி)

## 12 வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரேலியா, ஜேர்மனி, நோர்வே, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் இதில் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இலங்கையின் சட்டங்களை முற்றாக மீறிய நிலையில் இலங்கையில் தங்கியிருந்தனர் எனவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (அ-சி)

## ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார் என பொலிஸ்மா அதிபருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச தரப்பு வேட்பாளர்கள் தொடர்ச்சியாகத் தாக்கி வருகின்றனர் என திஸ்ஸ அத்தநாயக்கா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரவின் வீடும், அலுவலகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கப்பட்டமை குறித்தும் திஸ்ஸ அத்தநாயக்கா தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வரவு - செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசிற்கு மிகப்பெரும் கடன் தொகை ஒன்றை வழங்கியுள்ளது. 2 கோடி 90 லட்சம் டொலர்களை அது இலங்கைக்கு கட்டம் கட்டமாக வழங்குகிறது.

இந்தநிலையில் அந்த நிதியம் வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை 5 வீதத்தால் குறைக்கவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது என்றும் அதனாலேயே வரவு - செலவுத் திட்டதை சமர்ப்பிக்காமல் அரசு ஏமாற்றுக்கின்றது என்று ஜே.வி.பி. கண்டித்துள்ளது.

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் தூதரக அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பருவப்பெய்ர்ச்சிக் காலத்தில் பெய்யவுள்ள கடுமையான மழையை அகதி முகாம் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய அபாயங்கள் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பிரிட்டன் நிதி உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து திருப்தியடைய முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களை மீளவும் தமது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேற்ற காட்டப்படும் சிரத்தை ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அகதிகளின் நடமாட்ட சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமெனஅவர் தெரிவித்துள்ளார்.

தாம் முன்னர் இங்கு வந்து பார்த்தபோது இருந்ததைவிட தற்போது அகதி முகாம்களின் நிலைமைகள் அபிவிருத்தி அடைந்துள்ள போதிலும் எதிர்வரும் பருவப்பெயர்ச்சி மழை காலத்தில் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு முகாமிலிருந்து மற்றுமொரு முகாமிற்கு மக்களை இடம்நகர்த்தும் செயற்பாடு ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் பெருந்தொகையான அகதிகளை மீள்குடியேற்ற முடியும் என்ற அரசின் வாக்குறுதி வரவேற்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக 4 கோடி 80 லட்சம் ஸ்ரேலிங் பவுண்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், மக்களுக்கு இந்த நிதி பயன்படக்கூடிய வகையில் அமையப்பெற வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

அகதிகள் தங்களது உறவினர்களுடன் தங்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வாக்குச் சாவடிக்குள் படம் எடுக்கத் தடை; சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த உத்தரவு

கொழும்பு,ஒக. 07

தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளுக்குள் வீடியோ கமரா, புகைப்பட கமரா மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை எடுத்துச் செல்வதும் பாவிப்பதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்ட ஏற்பாடுகளை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதேநேரம்,ஆயுதங்களுடன் எவரும் வாக்குச் சாவடிகளுக்குள் பிரவேசிக்க இடமளிக்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தென் மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலையொட்டியே தேர்தல் ஆணையாளர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கி இருக்கின்றார்.

இதேநேரம், வாக்காளர்கள், அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள், வேட்பாளர்கள், கட்சிகளின் வாக்குச் சாவடி முகவர்கள் 'பவ்ரல்' மற்றும் சி.எம். ஈ.வி. அமைப்புக்களின் தேர்தல் கண்காணிப்பாளர்கள். பொலிஸார், தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் அனுமதி பெற்றிருப்போர் போன்றோரைத் தவிர வேறு எவரும் வாக்குச் சாவடிகளுக்குள் கண்டபடி பிரவேசிக்க அனுமதிக்கப்படக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார் . (அ-சி)

# தமிழ் பேசும் முஸ்லிம்களின் தமிழியல், பண்பாடு, சமூகம் சார்ந்த உலக ஆய்வு மாநாடு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

கொழும்பு, ஒக். 07

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை தனது முதலாவது உலக ஆய்வு மாநாட்டினை நடத்தவுள்ளது. இம்மாநாடு நம் நாட்டிலும் பிற நாடுகளிலுமுள்ள அறிஞர்கள் ஆய்வாளர்களை ஒன்று சேர்ப்பதுடன் மனிதப்பண்பியல், சமூக விஞ்ஞானம் தொடர்பாகத் தம் கருத்துக்களைப் பகிரவும் அறிவினை அகல்விக்கவும் உதவும். " தமிழ் பேசும் முஸ்லிம்களின் தமிழியல் பண்பாடு, சமூகம் " என்னும் கருப் பொருளில் இம் மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

இம் மாநாட்டில் " தமிழ் பேசும் முஸ்லிம்களின் தமிழியல், பண்பாடு, சமூகம் " என்னும் கருப்பொருள்களுக்குட்பட்டு இலக்கியம், மொழியியல், பண்பாடு, வரலாறு, சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல், நாடகம், நுண்கலை, கல்வி, அரசியல், பொருளியல், தமிழ் பேசும் முஸ்லிம்களின் மறுமலர்ச்சி என்னும் விடயங்களில் எழுபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் முதலியோருடைய ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும் இம் மாநாடு நடைபெறவுள்ளது.

மலேசியாவிலிருந்து 15இற்கும் மேற்பட்ட பேராளர்களும், இந்தியாவில் இருந்து பேராசிரியர் சாய்பு மரைக்காயர், அவருடைய துணைவியார் பேராசிரியை நஸீனா பானு ஆகியோருட்பட்ட பலர் பேராளர்களாக பங்கேற்கவுள்ளனர். பிரபல எழுத்தாளர் தோப்பில் முகம்மது மீரான் மாநாட்டில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுகின்றார். இலங்கையின் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம், கிழக்கு, சப்ரமுவ, ஊவா, பல்கலைக்கழகங்களிலிருந்து பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பேராளர்களாகப் பங்குபற்றுகின்றனர்.

இம் மாநாட்டில் பார்வையளராகப் பங்குபற்ற விரும்புபவர்கள் ஆயிரத்து 500 ரூபா செலுத்திப் பதிவுசெய்துகொள்ளலாம். பார்வையாளராகப் பங்குபற்ற விரும்புபவர்கள் பதிவுப் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அப்படிவத்தினை அனுப்பிவைக்க வேண்டும். விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. திருமதி எம். எஸ். எவ். ஸாதியா, செயலாளர்/உலக ஆய்வு மாநாடு, மொழித் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில். மின்னஞ்சல்: saadhiyas@gmail.com. மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழு ஏற்றுக் கொண்டவர்களே பார்வையாளராகப் பங்கு பற்றலாம். என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# மரண அறிவித்தல்கள்

## பாலசுந்தரம் அசோகன்

வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சென்னை திருமங்கலத்தில் வசித்துவந்தவருமான பாலசுந்தரம் அசோகன் நேற்று (06.10.2009) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2009) புதன்கிழமை சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பூங்கோ இல்லம்',*
*வியாபாரிமூலை.*

தகவல்:
சி.பாலசுந்தரம், சிவகாமிப்பிள்ளை.

## செல்வி பாஸ்கரதாஸ் திபாஜினி



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பாஸ்கரதாஸ் திபாஜினி நேற்று (06.10.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாஸ்கரதாஸ் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் திலீபா, திலீபன் ஆகியோரின் அன்புத் தங்கையும் பவ்ஜாவின் அன்புச் சின்னக்காவும் திரு, சிவம், பாலு, சிவந்தன் ஆகியோரின் அன்பு மருமகளும் சற்குணேஸ்வரி, ஜெகதீஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகளும் சிவபாக்கியம், இரத்தினம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (07.10.2009) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் வீதி,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
மு.சிவம் (மாமனார்).

CHEMISTRY
Piratheesh
B.Sc. (Hons) Spl.
Group & Personal
(Tamil & English Medium)
T.P.: 0779672277

வெளிவாரி வகுப்புக்கள்
அடிப்படைக் கணிதமும் புள்ளிவிவரவியலும்
ஆசிரியர்:த.தவசேகர்
Part I
வியாழன் 4 மணி
Part II
வியாழன் 5 மணி
1st Com
திங்கள் 4 மணி
D.M.I
ஆரியகுளம் சந்தி

வேலைவாய்ப்பு
★ கணனி ரைப்பிங் செய்யக்கூடிய நல்ல தேர்ச்சி உடையவர் தேவை.
★ மாதச் சம்பளம் 7,000 - 10,000 வரை வழங்கப்படும்.
0718471835/0772905783

CHEMISTRY
2011 A/L
ஒட்சியேற்றலும், தாழ்த்தலும்
ஆரம்பம்:- 07.10.2009
6.15 a.m புதன்
2010 A/L
ORGANIC புதிய பிரிவு
ஆரம்பம்:- 07.10.2009
5.00 p.m புதன்
S.Vasu B.Sc.
NAVALAR
Anaipanthy, Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org